# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 286 | சனி, மே 11, 2024 | 15 பக்கங்கள்




## இலக்கின் கேள்விகளும் எரிக் சூல்ஹைமின் பதில்களும்



## மே தினத்தில் தமது பலவீனங்களை வெளிப்படுத்திய பிரதான கட்சிகள்

அகிலன்

## பசில் கொடுக்கும் அழுத்தம் இணங்குவாரா ஜனாதிபதி?

பத்திரிகையாளர் நிக்ஸன் செவ்வி




© 2024 இலக்கு இணையம்

# மன்னாரில் ஒரு துண்டு நிலத்தை கூட நாங்கள் அதானிக்கு வழங்க மாட்டோம்

## அருட்தந்தை சந்தியோகு



மன்னார் தீவில் அதானி நிறுவனத்தினால் மேற் கொள்ளப்படவுள்ள 52 காற்றாலை உயர் மின் திட்டத்திற்கு இலங்கை அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாது என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை சந்தியோகு மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் புதன்கிழமை (08) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், “மன்னார் தீவில் மீண்டும் முன்னெடுக்கப் படவுள்ள குறித்த திட்டத்தினால் எமக்கு வரவுள்ள அழிவுகள் குறித்து நாங்கள் பல வருடங்களாக கூறி வருகிறோம். குறித்த திட்டத்தினால் எமது வாழ்விடம் திட்டமிட்டு பறிக்கப்படவுள்ளது. எமது பண்பாடு மற்றும் வரலாற்றுச்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மூதூரில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம்

மூதூர் பிரதேச செயலகம் மற்றும் மூதூர் சமுர்த்தி பிரதேச அமைப்பும் இணைந்து இலவச மருத்துவ முகாம் ஒன்றினை புதன்கிழமை (08) மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி .எம். முபாறக் அவர்களின் தலைமையில் மூதூர் கலாச்சார மண்டபத்தில் நடாத்தியது.



தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# அரசியல்த்துறை துணைப் பொறுப்பாளர் - கட்டளைத் தளபதி ஆகியோரின் தாய்மார்கள் மரணம்







தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்த்துறை துணைப் பொறுப்பாளர் திரு.சோ.தங்கன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி. பரமேஸ்வரி சோமசுந்தரம் அவர்கள் செவ்வாய்க்கிழமை (07.05.2024) தாயகம் வவுனியாவில் காலமானார்.

தங்கன் அவர்கள் 2009 ஆம் ஆண்டு சரணடைந்த நிலையில் இலங்கைஇராணுவத்தால்பலவந்தமாக காணாமல் செய்யப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் படையணியின்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# திருமலை நாகதம்பிரான் ஆலயத்தை நாக விகாரையாக மாற்றினார் பிக்கு

குலதெய்வமாக வழிபட்டு வந்த நாகதம்பிரான் ஆலயத்தை நாக விகாரையாக மாற்றி தமது வழிபாட்டை தடை செய்துள்ளதாக திரியாய் மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை – குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட திரியாய் வளத்தாமலையடி பகுதியில் உள்ள நாகதம்பிரான் ஆலயமானது 2021 ஆம் ஆண்டுக் குப் பின்னர் பௌத்த பிக்கு ஒருவரினால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் சப்த நாக விகாரையாக மாற்றப்பட்டு திரியாய் மக்களின் வழிபாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.



குறித்த ஆலயத்தில் திரியாய் மக்கள் பரம்பரை பரம்பரையாக குலதெய்வ வழிபாட்டில் ஈடுபட்டு வந்ததாகவும், 1984 ஆம் ஆண்டு இடம்பெயர்வில் சென்று மீண்டும் 2002 ஆம் ஆண்டு வந்து வழிபாட்டில் ஈடுபட்டு வந்த நிலையில் 2021 ஆண்டளவில் பிக்கு ஒருவரினால் தமிழ் மக்களின்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# கனடா பிரிவினையை தூண்டுவதாக இந்தியா குற்றச்சாட்டு

பஞ்சாபில் தனிநாடுகோரி வரும் காலிஸ்தான் அமைப்பினருக்கு கனடா ஆதரவுகளை வழங்குவதன்மூலம் தனது நாட்டில் பிரிவினையை தூண்டிவருவதாக இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது.



தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து காலிஸ்தான் அமைப்பினர் கடந்த ஞாயிற்றுக் கிழமை(5) கனடாவின் ஒன்ராரியோ மாநிலத்தில் மிகப்பெரும் கவனயீர்ப்பு பேரணி ஒன்றை நடத்தியிருந்தனர். Ontario Gurdwara Committee என்ற அமைப்பே இந்த பேரணியை ஏற்பாடு செய்திருந்தது.


பஞ்சாப்பில் அமைக்கப்படும் தனிநாடு தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என இந்தியா கருதுகின்றது. இந்த பேரணியில் தனிநாட்டுக் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டதுடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி சிறைக்குள் இருக்கும் உருவங்களும் காட்சியகப்படுத்தப்பட்டிருந்தது இந்தியாவை அதிக சினம் கொள்ள வைத்துள்ளது. இது தொடர்பில் இந்தியா தனது கடும் அதிருப்தியை கனடாவிடம் தெரிவித்துள்ளது.

பேச்சுரிமை என்ற பெயரில் ஏனைய நாடுகளை சீண்டும் நடவடிக்கைகளை கனடா நிறுத்த

தொடர்ச்சி 07ஆம் பக்கம்

# குருதியை உறையச் செய்யும் கோவிட் தடுப்பு மருந்து

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட அஸ்ரா செனீக்கா (AstraZeneca) என்ற நிறுவனம் தயாரித்த கோவிட்-19 தடுப்பு மருந்து சிலருக்கு குருதி உறைதலை ஏற்படுத்துவதாகவும், அதனால் பலர் மரணம்அடைந்துள்ளதாகவும் எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து அந்த நிறுவனம் தடுப்பு மருந்துகளை உலகச் சந்தையில் இருந்து இந்த வாரம் அகற்றியுள்ளது.



2020 ஆம் ஆண்டு கோவிட் நோய் வேகமாக பரவிய சமயத்தில் 2021 ஆம் ஆண்டு இந்த தடுப்பு மருந்து அறிமுகப்படுத்தப் பட்டிருந்தது. இதுவரையில் 3 பில்லியன் மருந்துகள் சந்தைக்கு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# சீன – அமெரிக்க மோதலால் உலக பொருளாதாரம் பாதிப்பு – நாணய நிதியம்




சீனாவுக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் அதிகரித்துவரும் வர்த்தக மோதல்களால் உலக பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டு வருவதாக அனைத்துலக நாணய நிதியம் கடந்த புதன் கிழமை(7) தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஸ்ரான்போட் பல்கலைக்கழகத்தில் பேசிய அனைத்துலக நாணய நிதியத்தின் பிரதிப் பணிப்பாளர் கீதா கோபிநாத் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இங்கிலாந்து தேர்தலில் இந்தியரை தோற்கடித்த பாகிஸ்தான் மேயர்




பிரித்தானியா நாட்டின் தலைநகர் லண்டன் மாநகர மேயராக சாதிக் கான் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். தொழிலாளர் கட்சியை சேர்ந்த சாதிக் கான் பாகிஸ்தானை பூர்வீகமாக கொண்டவர். அவர் தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றி பெற்று லண்டன் மாநகர மேயராகி உள்ளார். அவரை எதிர்த்து போட்டியிட்டவர்களில் டெல்லியை சேர்ந்த இந்திய வம்சாவளி தொழிலதிபர் தருண் குலாட்டியும்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# போர் முடிந்து 15 ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழர்கள் காணாமலாக்கப்படுகின்றனர்

*உள்நாட்டுப் போர் முடிந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், பாதுகாப்புப் படையினர் தமிழ் இளைஞர் யுவதிகளை கடத்திச் சென்று காணாமல் ஆக்குவதும், அவர்களை பாரதூரமான உடல் மற்றும் பாலியல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்குவதும் தொடர்ந்தும் இடம்பெறுவதாக சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயல்திட்டத்தின் புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*




*இது தொடர்பில் அவ் அமைப்பினால் வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது,"தமிழர்களின் காணாமல் போதல்கள், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகள், 2015-2022 என்னும் இவ்வறிக்கையில், இந்த ஏழாண்டு காலப்பகுதியில், 139 தடவைகள் பாது காப்புப் படைகளால் சட்டவிரோதமாகப் பிடித்துச் செல்லப்பட்டு, தடுத்துவைத்திருக்கப்பட்ட, 20-39 வயதிற்குட்பட்டவர்களைப் பெரும்பான்மையானவர் களாகக் கொண்ட, 109 ஆண்களும் 14 பெண்களுமாக, 123 தமிழர்களது வாக்கு மூலங்கள் ஆராயப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட இத்தமிழர்கள் அனைவரும் இப்போது இலங்கைக்கு வெளியே வசிக்கின்றார்கள்.*

*2009இல் போர் முடிந்த பின்னர், தமிழர்கள் கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவது தொடர்பில் முன்னர் வெளியிட்ட அறிக்கைகளின் தொடர்ச்சியாக வெளிவரும் இப்புதிய அறிக்கை, சரணடைந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கும் தமிழ்ப் பொதுமக்களுக்கும் எதிரான கடத்தல், காணாமல் போகச்செய்தல் மற்றும் சித்திரவதைகளில் பாதுகாப்புப் படைகளால் போர் முடிவடைந்த உடனடி ஆண்டுகளில் மேற்கொள்ளப் பட்டஅதேமுறைமைகளும்நடைமுறைகளுமேஇற்றை வரையும் தொடர்வதைக் காட்டுகின்றது.*

*மேற்கொள்ளும் குற்றங்களுக்கு எவ்விதமான பின்விளைவுகளையும் எதிர்கொள்ளாமல் அதிகாரத் தைப் பயன்படுத்துவது என்றுதான் தண்டனையிலிருந்து விலக்களித்தல் என்பது வரையறை செய்யப்படுகின்றது. இது காலப்போக்கில் அரசியல் அமைப்புக்களிலுள்ளும் அரசியல் கலாச்சாரத்தினுள்ளும் ஆழ வேரூன்றிப் போயுள்ளது.*

*பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப் பட்டுவரும் பாரதூரமான சர்வதேசக் குற்றங்களுக்கு எவ்விதமான பொறுப்புக் கூறலுமில்லாமல் பல தசாப்தங்களாக இத்தண்டனை விலக்களிப்பு நிலை நாட்டப்பட்டுள்ளது. பாதுகாப்புதுறை சீரமைக்கப் படுவதற்கும், தமிழர்களுக்கு எதிராக இவ்வன்முறைக் கலாச்சாரத்திற்குப்பொறுப்பானவர்களைநீக்குவதற்கும் சர்வதேச சமூகம் பாரிய அழுத்தத்தைக் கொடுத்தால் மட்டுமே இதனை நிறுத்திக்கொள்ள முடியும்.*

*இவ்வறிக்கையில் ஆய்வுசெய்யப்பட்ட வாக்கு மூலங்களை வழங்கியவர்கள் பிரித்தானியாவிலோ அல்லது இதர இடங்களிலோ புகலிடம் கோரும் தமிழர்களின் ஒரு சிறு பகுதியினர் மட்டுமே' இவ்வாறு சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயல்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரி வித்தார்.*

*இவ்வறிக்கையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட*

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## ஈழத்தமிழர் இறைமையை ஒடுக்கும் சிறிலங்காவிடமும் அதன் ஆதரவு நாடுகளிடமுமே 15 ஆண்டுகளாகத் தீர்வு தேடும் விந்தை

சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பு நடைபெற்று 18.05. 2024 அன்று 15 வது ஆண்டு நிறைவு பெறுகிறது. சிறிலங்கா ஈழத்தமிழர்களின் இறைமையின் அடிப்படையில் அவர்களின் தமிழீழத் தாயகத்தில் அவர்களது தேசிய அரசாக அவர்களது தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் 31 ஆண்டுகாலம் நடைமுறையரசாக அமைந்திருந்த தமிழீழ அரசின் இறைமையை ஒடுக்குவதன் மூலம் ஈழத்தமிழர்களின் தாயகத்தைத் தான் ஆக்கிரமிப்பதற்காகவே இந்த முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பை அனைத்துலகச் சட்டங்களை மீறித் தனக்கு ஆதரவான இந்திய அமெரிக்க மேற்குலக நாடுகளின் ஆயுத வழங்கல் படைபலப் பயிற்சி தொழில்நுட்பத்துணை புலனாய்வுத்துணை மற்றும் கடன் மான்யம் போன்ற நிதித் துணைகளுடன் நடாத்தியது என்பது வரலாறு. அனைத்துலக நீதிக்கான நீதிமன்ற, அனைத்துலக குற்றவியல் நீதிமன்ற விசாரணைகளும் சிறிலங்காவை அனைத்துலகச் சட்டங்களுக்குள் கொண்டு வராதவாறு கடந்த பதினைந்து ஆண்டுகளாகச் சிறிலங்காவின் ஆதரவு நாடுகளே சிறிலங்காவுக்கு உதவுகின்றன என்பதும் சமகால வரலாறு. மேலும் இதே சிறிலங்காவின் ஆதரவு நாடுகளே சிறிலங்கா பாதுகாப்புச் செலவாக இந்நாடுகளிடமும் இந்நாடுகளின் அனுசரணையுடன் தனியாரிடமும் கூடவே சீனாவிடமும் பெற்ற கடன்களால் அடைந்த பொருளாதார வங்குரோத்து நிலையில் இருந்தும் சிறிலங்கா பிணைபெற உதவுகின்றன. இந்நிலையில் சிறிலங்காவிடமும் அதன் ஆதரவு நாடுகளிடமும் கடந்த பதினைந்து ஆண்டுகளாகக் கெஞ்சியும் கொஞ்சியும் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு பெறலாம் என்றும் சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்புக்கு அதனைச் செய்தவர்களுக்குத் தண்டனை நீதியோ பாதிப்புற்றவர்களுக்குப் பரிகார நீதியோ பெறலாம் எனவும் தாயக புலத்து அரசியல்வாதிகள் முயற்சிப்பதைப் பார்க்கையில் பரிதாபமாகவுள்ளது.

மேலும் சிறிலங்கா தன்னுடைய ஆக்கிரமிப்பில் இருந்து தங்களின் இறைமையை மீள்விப்பதற்கு ஈழத்தமிழர்கள் நடாத்தி வரும் தேசிய விடுதலைப் போராட்டத்தை பிரிவினை என்று திரிபுவாதம் செய்து தனது ஈழத்தமிழின அழிப்பைத் தேசிய பாதுகாப்புக்கும் ஒருமைப்பாட்டுக்குமான யுத்தம் என்று நியாயப்படுத்தி வருகிறது. அவ்வாறே ஈழத்தமிழர்கள் தங்களுடைய உயிரையும் உடமைகளையும் வாழ்வாதாரங்களையும் இனஅழிப்புச் செய்த உட்கட்டுமான அழிப்புச் செய்த சிறிலங்காவுக்கு எதிராக வெளிப்படுத்திய பாதுகாப்புக்கான ஆயுதப்போராட்டத்தை பயங்கரவாதம் எனத் தனது ஆதரவு நாடுகளின் துணையுடன் இன்று வரை சாதித்து வருகிறது. இதுவே தனது நிலைப்பாடு என்பதை உறுதி செய்யும் வகையில் இன்று சிறிலங்காப் பாராளுமன்றத்தில் பயங்கரவாதம் காரணமாக 1983 முதல் 2009 வரை இடம்பெற்ற போர் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் சர்வதேச தலையீடுகள் இல்லாத பொறுப்புக் கூறலை மேற்கொள்வதற்காகவும் சிறிலங்கா பொறுப்புக் கூறல் இனநல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கான சட்டத்தை உருவாக்குவதற்கான நல்லிணக்கச் செயலணிச் சட்டமூல வரைபைச் சிறிலங்கா சமர்ப்பித்துள்ளது. இங்கு "பயங்கரவாதத்திற்கு எதிரான போர்" என்ற சொல்லாட்சியைச் சட்டமாக்குவதன் மூலம் 1948 முதல் இன்று வரை சிறிலங்கா ஈழத்தமிழர்கள் மேல் நடாத்திக் கொண்டிருக்கும் "மக்கள் மேலான போரையும்" அனைத்து ஈழத்தமிழின அழிப்பு ஈழத்தமிழினத்துடைப்பு ஈழத்தமிழின பண்பாட்டு இனஅழிப்பு என்பனவற்றையும் சிறிலங்காவின் தேசிய பாதுகாப்புக்கும் ஒருமைப்பாட்டுக்குமான தேசிய பாதுகாப்புச் செயற்பாடுகள் என சட்டத்தகுதி வழங்க முற்பட்டுள்ளது. அதே வேளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விட மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்கி வரும் ரணில் நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தின் வழி ஊடகச் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தத் தொடங்கி விட்டார். இச்சூழ்நிலையில் அக்டோபர் 16க்குள் தேர்தல் என்று சனநாயக பூமியாகச் சிறிலங்காவைக் காட்டவும் தொடங்கியுள்ளார். புறக்கணிக்கப்பட வேண்டிய இந்த சனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளரை நியமித்து புதுமையான குடியொப்பமொன்றை நடாத்த ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் முயற்சிக்கிறார்கள். இவர்களுக்கு ஜனாதிபதி தேர்தலில் எந்த வகையில் பங்கேற்றாலும் அது ஈழத்தமிழரின் இறைமை இழப்பு என்பது ஏனோ தெரியவில்லை. அவ்வாறே தந்தை செல்வநாயகம் 1975 இல் செய்த தன்னாட்சி உரிமைப்பிரகடனத்தைத் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளே மறந்து அவர் கொள்கை தங்கள் வழிதான் என திரிபுவாதம் செய்வதையும் கண்டு இரசிக்கும் நிலையில் ஈழத்தமிழர்கள்.

மேலும் அன்று போலவே இன்றும் ஈழத்தமிழின அழிப்பைச் சிங்கள பௌத்த நாடாக இலங்கையை மாற்றுவதற்கான கருவியாகவே கொண்டு செயற்பட்டு வருகிறது என்பதைச் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்ட அமைப்பினர் வெளியிட்டுள்ள பாதுகாப்புப் படையினர் தமிழ் இளையவர்களைக் கடத்திச் சென்று வலிந்து காணாமலாக்கல், சித்திரவதைகளுக்கு உள்ளாக்குதல், பாலியல் வன்முறைகளுக்குள்ளாக்குதல் 2015 முதல் 2023 என்னும் புதிய அறிக்கை நிரூபித்துள்ளது. 139 சம்பவங்களை சாட்சியப்படுத்தியுள்ள இவ்வறிக்கை பாதிக்கப்பட்டவர்களில் 65 பேர் சொந்த வீடுகளில் அல்லது உறவினர்களின் வீடுகளில் இருந்து சட்ட அமுலாக்க அதிகாரிகளால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்கள், மற்றையவர்கள் வீட்டுக்கு அல்லது வேலைக்குச் சென்று கொண்டிருக்கையில் பிடித்துச் செல்லபட்டவர்கள் என்பதையும் எடுத்துரைத்துள்ளது. இவர்களில் 130 பேர் கடுஞ்சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் எனவும் அறிக்கை தெரிவித்துள்ளது இவ்வமைப்பு தங்களுக்கு சாட்சியங்கள் தர இயலாத நிலையில் உள்ள பாதிப்புற்றுள்ளவர்களின் நிலைகளையும் கவனத்தில் எடுப்பின் பாதிப்புற்றவர்கள் மிக மிக அதிகமாகவே உள்ளனர் என்பதையும் விளக்கி இவை பரந்து பட்ட குற்றச் செயல்களாக முறைப்படுத்தப்பட்டே நடைபெறுகின்றன என்பதைத் தெளிவாக்கியுள்ளது. அத்துடன் யுத்தம் முடிந்த காலத்தில் பாதுகாப்புப் படைகளால் பின்பற்றப்பட்ட அதே முறைமைகள் இன்று வரை தொடர்கின்றன என்பதையும் வெளிப்படுத்திய இவ்வறிக்கை தமது குற்றங்களுக்குரிய பின்விளைவுகள் எதனையும் எதிர்கொள்ளாமல் அதிகாரத்தைப் பயன்படுத்துவதே தண்டனை விலக்கு என்று வரையறை செய்தல் சிறிலங்காவின் அரசியலமைப்பு மற்றும் அரசியல் கலாச்சாரத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளமையே பாதுகாப்புப் படையினரால் செய்யப்படும் சர்வதேசக் குற்றங்களுக்கு பல தசாப்தங்களாகப் பொறுப்புக் கூறல் இல்லாதிருப்பதற்கான காரணம் என்பதையும் தெரியப்படுத்தியுள்ளது.

இதற்கிடை சிறிலங்காவின் உள்ளக பொறிமுறை வழியாகவோ அல்லது சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறையிலோ மட்டுமல்ல தேசிய மக்கள் சக்தியின் வழியிலும் கூட ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது என்பதை அநுரகுமர திசநாயக்கா கடந்த வாரத்தில் தன்னைச் சந்தித்த யப்பான், தென்ஆபிரிக்கா, சுவிஸ்லாந்து தூதுவர்கள் குழுவிடம் "தேசியப் பிரச்சினையாக இனப்பிரச்சினைக்குத் தங்களால் தீர்வு காண இயலாது மற்றவற்றுடன் இணைந்த வழியிலேயே தீர்வு" என்ற கூற்றால் உறுதிப்படுத்தியுள்ளார். இந்நிலையில் முல்லைத்தீவு சிங்களமயமாக்கப்படுகிறது. கொக்குத் தொடுவாய்க்கிராமம் போன்ற மூன்று கிராமங்களையும் ஆறு கிராமசேவகர் பிரிவுகளையும் கொண்ட வளமான பகுதிகள் முதல் மதுரமடு, தண்ணிமுறிப்பு, ஆமையன் குளம் போன்ற மானாவாரிக் காணிகள் வரை அனைத்தையுமே சிறிலங்கா சிங்களவர்களுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கிறது. இனியாவது தமிழ் அரசியல் வாதிகளே மௌனத்தைக் கலைத்து மக்களுக்காகப் பேசுங்கள் என்று தங்கம்மா என்ற பாதிப்புற்ற தாயொருவர் ஊடகங்களிடம் நெஞ்சத்து வேதனையுடன் இவ்வாரத்தில் குமுறியுள்ளார். மக்களின் குரலாக ஒலியுங்கள் என்ற தாயக ஈழத் தமிழ் அரசியல்வாதிகளுக்கான இலக்கின் அழைப்பு இன்று ஈழத்தமிழ் மக்களின் இதயக்குமுறலாகி வருவதைக் காண்கின்றோம். இனி வரும் 16வது ஆண்டிலாவது மக்கள் இறைமையை முதன்மைப்படுத்தித் தாயக தேசிய தன்னாட்சியை மீள்விக்க தாயக புலத்து ஈழத்தமிழர் இணைந்திட இலக்கு வேண்டி நிற்கிறது.

**ஆசிரியர்**

# மே தினத்தில் தமது பலவீனங்களை வெளிப்படுத்திய பிரதான கட்சிகள்

அகிலன்

இலங்கையின்அரசியல்கட்சிகள்பாரம்பரியமாக தங்கள் பலத்தை வெளிப்படுத்தும் மே தினம் கடந்த வாரம் கொழும்பில் பெருமெடுப்பில் இடம்பெற்ற போதிலும், எதிர்பார்த்த அரசியல் மாற்றங்கள் எதனையும் காணமுடியவில்லை. கட்சித் தாவல்கள் பலவற்றை இந்த மே தினத்தில் பார்க்கக்கூடியதாகஇருக்கும்எனத்தெரிவிக்கப்பட்ட பலத்த எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியிருந்தது. ஆனாலும், அன்றைய தினம் குறிப்பிடத்தக்க அரசியல் அதிர்வுகள் இல்லாமலேயே மே தினம் முடிவுக்கு வந்தது.

பிரதான கட்சிகளான ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, பிரதான எதிர்க் கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி., ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவை மே தினத்தில் தமது பலத்தைக் காட்டுவதற்காக கொழும்பில் களமிறங்கியிருந்தன.




ரணில் தரப்பின் மே தின மேடையில், சஜித் அணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. அது நடக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, பல சஜித் அணி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் பேரணியில் கலந்துகொள்வார்கள் என சூசகமாகத் தெரிவித்த கருத்துக்களால் இந்த ஊகம் உருவாகியிருந்தது.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் இந்த எம்பிக்களின் கட்சித் தாவல் ஒத்திவைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் இப்போது தெரிவித்துள்ளனர். ஜனாதிபதிவிக்கிரமசிங்கஜனாதிபதிவேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னரே இவ்வாறானதொரு கட்சித் தாவல் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகஇப்போதுரணிலின்ஆதரவாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது.




சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் இணைப்பதற்கான முயற்சிகள் பல்வேறு மட்டங்களில் முன்னெடுக்கப்பட்டுவந்தது. வெளிநாடுகள் சிலவும் இந்த முயற்சிகளின் பின்னணியில் இருந்து செயற்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. ஜே.வி.பி.யின் எழுச்சியைத் தடுப்பதற்கும், நிச்சயமற்ற தேர்தல் முடிவு வருவதைத் தவிர்ப்பதற்குமாகத்தான் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. ஆனால், ஒரு கட்டத்துக்கு மேல் அந்த முயற்சியை முன்னெடுக்க முடியவில்லை.

எவ்வாறாயினும், சஜித் அணியின் எம்.




பி.க்களுக்கும் ஐ.தே.க. தலைமைக்கும் இடையில் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன என்பது அரசியல் வட்டாரங்களில் பகிரங்கமான இரகசியம். இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து பொதுவான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது நாட்டுக்கு நன்மை பயக்கும் என சஜித் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள அண்மையில் ஊடகமொன்றுக்கு பேட்டியளித்திருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

சஜித் அணியிலிருந்து பெருமடுப்பிலான கட்சித் தாவல்கள் இல்லாத போதிலும், ஒரு ஆச்சரியமான கட்சித் தாவல் இருந்தது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரான கயாஷான் நாவானந்த, தன்மை 'சுயாதீனமாக' அறிவித்து, ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டார். இவர் மொனராகலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் இளம் பின்வரிசை உறுப்பினராவார்.



நாவானந்தா முதலில் வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணியைச் சேர்ந்தவர். தொழில் ரீதியாக ஒரு வைத்தியரான இவர், அரசியல் எழுச்சி உச்சத்தில் இருந்த போது அமைச்சு மாற்றத்தின் பின்னர் 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் கீழ் சுகாதார இராஜாங்க அமைச்சராக குறுகிய காலத்துக்கு பணியாற்றினார்.

எதிர்பார்த்த அரசியல் அதிர்வுகளை மே தினத்தில் காணமுடியவில்லை என்றாலும் கூட, ஐ.தே.க. தமது மே தினப் பேரணியில் கணிசமானவர்கள் கலந்துகொண்டதாகக் கூறியது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உரையில், எதிர்வரும் மாதங்களில் நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான தனது முயற்சியில் தம்முடன் இணைந்து கொள்ளுமாறு சஜித் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் அழைப்பு விடுத்தார்.

ஆனால், கொழும்பில் இடம்பெற்ற பிரதான மே தினப் பேரணிகளைப் பொறுத்தவரையில், ஐ.தே.க. நான்காவது இடத்தில் இருந்தாகவே தகவல்கள் கூறுகின்றன. சஜித் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் பேரணியில் அதிக மக்களைக் காணமுடிந்தது. அடுத்ததாக ஜே.வி.பி., பொதுஜன பெரமுன ஆகியவற்றின் பேரணிகள் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. இவற்றுக்குப் பின்னால்தான் அதாவது நான்காவது இடத்தில்தான் ஐ.தே.க.வின் பேரணி இருந்தது.



இவையெல்லாம் தானாக கூடிய கூட்டங்கள் அல்ல. பெருந்தொகையானவர்கள் பஸ்களில் கொண்டுவந்து இறக்கப்பட்டனர். கண்டியிருந்து கொழும்பு வந்த ரயில்களில் ரணிலின் ஆதரவாளர்கள் பெருமளவுக்குக் கொண்டுவரப்பட்டு இறக்கப்பட்டனர். இலவசப் பயணத்துக்கு மேலாக உணவுப் பாசல்களும் வழங்கப்பட்டன. கட்சிகள் இதற்காகப் பெருந்தொகை பணத்தை ஒதுக்கியிருந்தன. பல கோடிகள் இதற்காக ஒதுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கொழும்பில் நடைபெற்ற பேரணியின் நிறைவில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீண்டும் எழுச்சி பெற்றுள்ளது என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. தமக்கு இன்னும் அரசியல் செல்வாக்கு இருக்கிறது என்பதை நிரூபிப்பதற்காக இந்த நிகழ்வை பொதுஜன பெரமுன நன்கு பயன்படுத்தியது.

பெரமுனவின் அனைத்து முக்கியஸ்தர்களும் பேரணியில் கலந்து கொண்டனர். கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ஒருமுறை கருதப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வர்த்தகருமான தம்மிக்க பெரேராவும் கலந்துகொண்டதாக அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர். ஜனாதிபதி விக்கிரமசிங்க மீண்டும் அதிகாரத்துக்கு வர வேண்டும் என பகிரங்கமாக கருத்துத் தெரிவிக்கும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் மொட்டுவின்

தொடர்ச்சி 07ஆம் பக்கம்

# பசில் கொடுக்கும் அழுத்தம் இணங்குவாரா ஜனாதிபதி?

**ஜனாதிபதியை கடந்த வாரம் மீண்டும் சந்தித்த பசில் ராஜபக்ஷ பொதுத் தேர்தல்தான் முதலில் நடத்தப்பட வேண்டும் என்பதற்கான கடுமையான அழுத்தத்தைக் கொடுத்திருக்கின்றார். இந்தப் பின்னணியில் அரசியல் களத்தில் என்ன நடைபெறுகின்றது? என்ன நடைபெறப்போகின்றது?**

## பத்திரிகையாளர் நிக்ஸன் செவ்வி



**ஜனாதிபதித் தேர்தலுக்கான களம் சூடுபிடித்துள்ளது. இந்த நிலையில் பொதுத் தேர்தலைத்தான் முதலில் நடத்த வேண்டும் என பசில் ராஜபக்ஷ மீண்டும் அழுத்தம் கொடுத்திருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்கவோ ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார். இந்தப் பின்னனணியில் அரசியல் களத்தில் என்ன நடைபெறுகின்றது என்பதை அறிய, பத்திரிகையாளரும், ஒருவன் செய்தித் தளத்தின் பிரதம ஆசிரியருமான அ.நிக்ஸனை அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

இரண்டு பேருக்கும் இடையில் சந்திப்புக்கள் இடம்பெற்றுவருகின்றன என்பது உண்மை. ஆனால், அவர்கள் என்ன பேசிக்கொள்கின்றார்கள் என்பதையிட்டு உத்தியோகபுர்வமாக தகவல்கள் எதுவும் வெளியிடப்படுவதில்லை. ஊகங்களின் அடிப்படையில்தான் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடுவார் என்பது உறுதி. ஆனால், என்ன சின்னத்தில் எந்தக் கட்சியில் போட்டியிடுவார் என்பது தெரியவில்லை. பொதுஜனபெரமுனவைப் பொறுத்தவரையில் அதில் ஒரு பகுதியினர் தமது கட்சியின் சார்பில் ஒருவரை களமிறக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினரைப் பொறுத்தவரையில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதைத்தான் விரும்புகின்றார்கள். இம்முறை தமது சார்பில் ஒருவரை களமிறக்கினால் அதில் வெற்றிபெறக்கூடிய வாய்ப்புக்கள் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும். பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்கள் முழுமையாக அதிலிருந்து மீளவில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும். இந்த நிலையில் பொருத்தமான ஒரு வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை அவர்கள் பார்க்கின்றார்கள்.

இதனால், ரணில் விக்கிரமசிங்கவைப் தமது பினாமியாக ஜனாதிபதியாக்கிவிட்டு அடுத்த ஐந்து வருடத்துக்குள் பெதுஜன பெரமுனவை மீளக்கட்டியெழுப்பி 2029 ஜனாதிபதித் தேர்தலில் நாமலை களமிறக்குவதுதான் மகிந்த ராஜபக்ஷவின் திட்டம். இருந்த போதிலும், பெரமுனவுக்குள் இந்த விடயத்தில் இரண்டு - மூன்று கருத்துக்கள் உள்ளன என்பது உண்மை.

**பசில் ராஜபக்ஷவின் அழுத்தத்துக்கு உட்பட்டு பொதுத் தேர்தல் முதலில் நடத்தப்படும் நிலை ஏற்பட்டால், ஜனாதிபதி ரணிலின் அரசியலை அது பாதிப்பதாக இருக்குமா?**

நிச்சயமாக அது ரணிலைப் பாதிக்கும். அது தெரிந்துதான் ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடத்தப்பட வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருக்கின்றார். தற்போதைய நிலையில் பொதுத் தேர்தல் நடப்பதாக இருந்தால், இரண்டு கட்சிகள் பலமாக உள்ளன. ஒன்று சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தி. இரண்டாவது, அநுராகுமார திஸாநாயக்கவின் ஜே.வி.பி. முதலில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் இந்த இரண்டு கட்சிகளும் அதிக ஆசனங்களைப் பெறும் நிலை வரலாம்.

குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தி அதிக ஆசனங்களைப் பெற்று, சிறிய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கும் நிலை வரலாம். அப்படி வந்துவிட்டால், அதன் பின்னர் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டு எந்தப் பயனும் இருக்கப்போவதில்லை. அதனால்தான் அவர் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் என்ற முடிவுக்கு வந்திருக்கின்றார். அதில் எந்த மாற்றமும் இல்லை.

இதனைவிட, இன்னொரு வாய்ப்பும் இருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு காபந்து அரசாங்கத்துடன் அவர் ஜனாதிபதித் தேர்தலை சந்திக்கவும் முற்படலாம். நாடாளுமன்றத்தை வைத்துக்கொண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால், கட்சிகள் பலமாக இருக்கும். எம்.பி.க்கள் பலமாக இருப்பார்கள். எனவே அதனை வைத்துக்கொண்டு தேர்தல் பரப்புரைகளை அவர்கள் முன்னெடுப்பார்கள். அதனால், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தலை நடத்தக்கூடிய சாத்தியங்களையும் ரணில் விக்கிரமசிங்க ஆராய்கின்றார்.

**பொது ஜன பெரமுனவின் மே தினக்கூட்டத்தில் பிரபல வர்த்தகர் தம்மிக்கப் பெரேரா முன்னிலைப் படுத்தப்பட்டார். பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக அவர் களமிறக்கப்படலாம் என்ற கருத்து இதன் மூலம் முன்வைக்கப்படுகின்றது. அதற்கான சாத்தியங்கள் எந்தளவுக்குள்ளன?**

பொதுஜன பெரமுனவுக்குள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இரண்டு - மூன்று கருத்துக்கள் நலவுகின்றன. அதில் ஒரு தரப்பினர்தான் தம்மிக பெரேராவை அல்லது வேறு எவரையாவது ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த வேண்டும் எனச் செயற்படுகின்றார்கள். ஆனால், மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துக்கொண்டு இப் போதைக்கு ஒதுங்கியிருக்க வேண்டும் என்று நினைக்கின்றார்கள்.

இந்த நிலையில் தம்மிக்க பெரேரா முன்னிலைப் படுத்தப்பட்டதை இரண்டு வகையாகப் பார்க்கலாம். முதலாவது, உண்மையிலேயே தம்மிக்க பெரேராவை களமிறக்குவது அவர்களுடைய நோக்கமாக இருக்கலாம். இரண்டாவது, தம்மின்ன பெரேராவை களமிறக்குவதாகக் காட்டிக் கொண்டு ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவது அவர்களுடைய நோக்கமாக இருக்கலாம்.



**பொதுஜன பெரமுனவின் எம்.பி.க்களைப் பொறுத்தவரையில் அதில் பலர் முதல் தடவையாக பாராளுமன்றத்துக்குத் தெரிவானவர்கள். அவர்கள் பென்ஷன் மற்றும் வாகன பெர்மிட் ஆகியவற்றைப் பெறுவதற்கு 4 வருடங்களாவது பதவியிலிருந்திருக்க வேண்டும். அதனால், நாடாளுமன்றம் முன் கூட்டடியே கலைக்கப்படுவதை அவர்கள் விரும்புவார்களா?**

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

# இலக்கின் கேள்விகளும் எரிக் சூல்ஹைமின் பதில்களும்





**சிறீலங்கா ஒரு தேர்தலுக்குத் தயாராகி வருகின்ற ஒரு பின்புலத்தில், முன்னர் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற காலப்பகுதியில், நோர்வே அரசின் சார்பாக பேச்சுவார்த்தைக்கான நடுநிலையாளராகப் பணியாற்றிய எரிக் சூல்ஹைம் அவர்களிடம், இலக்கின் சார்பாகச் சில கேள்விகள் முன்வைக்கப்பட்டன. அவ்வாறு முன் வைக்கப்பட்ட கேள்விகளையும், அவற்றுக்கு எரிக் சூல் ஹைம் தந்த பதில்களையும் கீழே தருகிறோம்:**

### கேள்வி:

**சிறீலங்காவில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற காலப்பகுதியில், ஜேவிபி அமைப்பினரின் பங்களிப்பு எப்படி அமைந்திருந்தது? சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற காலப்பகுதியில், சிறீ லங்காவில் நீண்ட காலமாக நிலவிவரும் இனப்பிரச்சியையைத் தீர்ப்பதற்கு அவர்கள் ஆதரவு அளித்தார்களா?**

### பதில்:

சமாதானப் பேச்சுவார்த்தையையும், இப் பேச்சுவார்த்தையில் இரு தரப்புக்கும் இடையே நடுநிலை வகிக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்ட நோர்வேயின் பங்களிப்பையும் ஜேவிபி எதிர்த்தது. இனப்பிரச்சினையைப் பொறுத்த அளவில், தமிழ் மக்களது அபிலாஷைகள் தொடர்பாக ஜேவிபிக்கு எந்தவித ஈடுபாடும் இருக்கவில்லை.

### கேள்வி:

**தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்று ஏற்படாமல் முட்டுக்கட்டை போட்டது மட்டுமன்றி, வடக்கையும் கிழக்கையும் பிரித்த ஜேவிபியின் செயற்பாடு இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு முற்றிலும் எதிரானது. அவர்களது நிலைப்பாட்டில் ஏதாவது மாற்றம் இப்போது ஏற்பட்டிருக்கிறது என்று நீங்கள் கருதுகின்றீர்களா?**

### பதில்:

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பொறுத்த அளவில் ஜேவிபியின் அணுகு முறையில்மாற்றம்ஏற்பட்டிருக்கிறது. இப்போது அவர்களில் ஒரு சமரச மனப்பான்மையைக் காணமுடிகிறது. எதிர்காலத்தில் அந்தக் கட்சி ஆட்சி அமைத்தால், இந்த அணுகுமுறையை அவர்கள் நடைமுறையில் காண்பிப்பார்கள் என நம்புகிறேன்.

### கேள்வி:

**சிறீலங்காவில் நடைபெறவுள்ள தேர்தல்கள் தொடர்பாக மேற்குலகத்தின் தலையீடுகள் எவ்வாறிருக்கின்றன?**

### பதில்:

என்னைப் பொறுத்தவரையில் அவ்வா றான தலையீடுகள் ஏதும் இருப்பதாகத் தெரிய வில்லை. மேற்குலகமாக இருந்தாலென்ன, கிழக்குலகமாக இருந்தாலென்ன, எந்த ஒரு சக்தியும் ஒரு குறிப்பிட்ட வேட்பாளரை அரசியல் ரீதியாகவும், நிதி ரீதியாகவும் ஆதரிக்கும் என நான் நினைக்கவில்லை. வெளிநாட்டுச் சக்திகளான இந்தியா, சீனா, அமெரிக்கா, ஐரோப்பா அனைத்துமே ஒரு நிலையான, விரைவாக விருத்தியடைகின்ற அமைதியான ஒரு சிறீலங்காவையே பார்க்க விரும்புகின்றன என்பது தான் உண்மை.

### கேள்வி:

**முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நடைபெற்று, இப்போது 15 வருடங்கள் நிறைவுபெற்றுவிட்டன. ஆனால் பாதிக்கப் பட்டவர்கள் எவருக்கும் இதுவரை நீதி வழங்கப்படவில்லை என்பது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

### பதில்:

போரில் காணாமல்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பது எல்லாவற்றையும் விட முக்கியமானது. போரில் தங்கள் வாழ்க்கைத்துணைகளை, பிள்ளைகளை, சகோதரங்களை இழந்த அனைவருமே தங்களது உறவுகளுக்கு நடந்தது என்ன என்பதை அறி வதற்கான ஏக்கத்தோடு காத்திருப்பது மட்டு மன்றி, அந்தப் பாதிப்பிலிருந்து விடுபட முடியாத வர்களாகவும் இருக்கிறார்கள். சிறிலங்கா அரசு, சிவில் சமூகம், இதற்கான சான்றுகளை வழங்கக் கூடியவர்கள் அனைவரும் இணைந்து இதற்கான பதிலைக் கண்டுபிடிக்க வேண்டும்.

• • •

---

**பசில் கொடுக்கும் ... தொடர்ச்சி ...**

நிச்சயமாக அவ்வாறான ஒரு பிரச்சினை இருக்கின்றது. பொதுஜன பெரமுனவில் 25 க்கும் அதிகமானவர்கள் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள். அவர்கள் பொதுத் தேர்தல் முதலில் நடத்தப்படுவதை விரும்பமாட்டார்கள். அதனையும் ரணில் விக்கிரமசிங்க தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வார். ஆனால், அழுத்தங்கள் அதிகமாக இருக்குமானால், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு - ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்வது தனக்கு சாதகமானதாக இருக்கும் என அவர் சிந்திக்கலாம்.

**ஜனாதிபதித் தேர்தல் எதிர்கொள்ளப்படும் நிலையில் மே தினப் பேரணிகளைத் தமது பலத்தைக் காட்டுவதற்குத்தான் பிரதான கட்சிகள் பலன்படுத்திக்கொண்டன. அந்த வகையில் எந்தளவுக்கு அவை வெற்றி பெற்றுள்ளன?**

பிரதான கட்சிகள் அனைத்தும் கொழும்பை மையப்படுத்தித்தான் மே தினப் பேரணிகளை நடத்தியிருந்தன. அவற்றில் அதிகளவு மக்கள் கலந்துகொண்டிருந்தார்கள். சிங்களப் பத்திரிகை ஒன்று வெளியிட்ட கருத்துக் கணிப்பில் சஜித் பிரேமதாஸவின் பேரணியில் அதிகமானவர்கள் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதற்கு அடுத்ததாக பொது ஜன பெரமுன, ஜே.வி. பி.க்கு அதிக மக்கள் சென்றுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.க.வின் மேதினப் பேரணிக்கு மிகவும் குறைவான மக்களே சென்றுள்ளார்கள் என்பது அந்தப் பத்திரிகையின் கணிப்பு.

ஆனால், பேரணிகளில் கூடும் மக்கள் தொகையை மட்டும் கருத்திற்கொண்டு ஆதரவைத் தீர்மானிக்க முடியாது.

இலங்கையைப் பொறுத்தவரையில் மிதக் கும் வாக்குகள்தான் வெற்றியைத் தீர்மானிக் கின்றது. சுமார் 60 வீதமானவர்கள் இறுதி நேரத்தில்தான் அவ்வாறு தமது ஆதரவைத் தீர்மானிப்பார்கள். 40 வீதமானவர்கள்தான் கட்சி களை அடிப்படையாகக் கொண்டவர்களாக இருப் பார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் அவர்கள் கட்சி அடிப்படையில் வந்திருக்கலாம். அல்லது கொண்டுவரப்பட்டு இறக்கப்பட்டிருக்கலாம். அனைத்துக் கட்சிகளுமே பஸ்களில் ஆட்களை ஏற்றி இறக்கியுள்ளார்கள். ஆகவே இந்த மக்கள் கூட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் வெற்றிகளைத் தீர்மானிக்க முடியாது.

• • •

# முள்ளிவாய்க்கால் நினைவலைகள்

துகன்–மட்டக்களப்பு



சுதந்திர வேள்விக்காய் துடித்து எழுந்த மானம் உள்ள தமிழர்கள் மண்டியிடாத வரலாற்றில் வினாக் குறியுடன் விடைபெற்ற தேசமது.



தமிழர் வாழ்க்கை வரலாறும் புதிதாய் எழுதப்பட்ட நாட்கள் மே 18 2009 அன்று முள்ளி வாய்க்கால் மண் தமிழர்களது குருதியில் சிவந்தது. அடக்கப்பட்ட ஒரு இனத்தின் விடியலை கட்டிக் காத்த போர் வரலாறும் புதையுண்டு போனது.



கற்பனையில் கவிபுனைய சிலர் கண்டதை யும் தான் கூற உண்மைகள் ஓரமாகவும் பொய்கள் பல புனையப்பட்டும் பொழுது போக்கு நினைவு கள் அல்ல மே 18.

நாங்கள் கண்ட வலியை நீங்கள் அறி வீர்கள்? பல நாட்கள் நாங்கள் துப்பாக்கி சத்தம் மழைத்துளியாகவும், பல் குழல் பீரங்கி சத்தம் இடி முழக்கமாகவும் இடைவிடாது எங்கள் காதுகளில் ரீங்காரம் இட்டபடி இருந்தது.

ஒரு நாள் வழமை போன்று மூட்டை முடிச்சுகளுடன் வலயர் மடம் மாதாவிடம் தஞ்சம் புகுந்தோம். அன்னையும் எங்களை அரவணைக்க வில்லை அவ்விடம் விட்டு வெளியேறி உயிர்தப்பி ஓட மறுத்ததில்லை நாம்.

சற்றுத் தூரம் செல்லும் முன் சிங்களவன் ஏவிய எறிகணையும் சீறி வந்தது. கண்ணெதிரே தாயார் மரணம். தந்தை சிறு வயது மகன் தூக்கி வைத்து அழுதபடி பதுங்கு குழி



அருகில் இருப்பதை கண்டோம்.

சிறிது நேரத்தில் மற்றுமோர் எறிகணை தந்தை தலைசிதறி மரணம். சிறுவயது மகன் யாரை பார்ப்பது மக்கள் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு ஓடியவாறு இருந்தார்கள்.

இதயம் நொறுங்கியது. தாய் தந்தை இருவரையும் அவ் பதுங்கு குழியில் போட்டு மூட அவ் இடத்தில் இருந்த சில மக்கள் முடிவு செய்து படுக்கையில் இருந்தபடி இருவரையும் பதுங்கு குளியில் போட்டு கொஞ்சம் மண் போடும் முன் எறிகணை சத்தம் கேட்டது அப்படியே தாய் தந்தையை விட்டு விட்டு மக்களோடு மக்களில் ஒருவனாய் எங்களை தாண்டி அந்த இளம் வயது மகன் ஓடினான்.



ஆனால் அவரும் இறுதியில் மிஞ்சினாரா என தெரியவில்லை. இப்படி பல நூறு உண்மை உறங்குகின்றது . ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் உயிர்கள் பதைபதைத்து துடித்து இறந்தது.

நாம் என்ன பாவம் செய்தோம் என்று அறிய முடியாது அப்பாவி தமிழர்களது உயிர்கள் காரணம் இன்றி இழக்கப்பட்டது..

முள்ளிவாய்க்கால் மண் ஒரு இனத்தின் வரலாறு மாத்திரம் அல்ல எங்களது இனத்தின் விடுதலை வீரமும். பன்பு தவறாத ஒழுக்கமும், காமம் தெரியாத தேசக் காவலர்களும், சுயமரியா தை சுயநிர்ணய உரிமை கலை பண்பாடு எல்லாம் கயவர்களின் கட்டவிழ்த்து விடப்பட்ட யுத்த வன்முறையினால் மூச்சுவிட மறுக்கிறது முள்ளி வாய்கால் மண் இன்று.

மறந்து செல்வதற்கு முள்ளிவாய்க்கால் நினைவுகள் என்பது ஒரு கதை அல்ல ஒரு இனத்தின் புதைகுழி அதனுள் அடங்கி இருப்பது ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள். கடந்து செல்வ தற்கு நான் கண்டது கற்பனை அல்ல எங்கள் இனத்தின் துயரங்கள்.

• • •

கனடா பிரிவினை ... தொடர்ச்சி ...

வேண்டும் என்பதுடன் கனடாவில் உள்ள இந்திய இராஜதந்திரிகளின் பாதுகாப்பையும் கனடா உறுதிப் படுத்த வேண்டும் என இந்தியாவின் வெளிவிவகார அமைச்சகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கனடாவில் உள்ள சீக்கிய மதத் தலைவரான ஹர்தீப் சிங் என்பவரை இந்தியாவின் புலனாய் வுத்துறை கடந்த வருடத்தின் நடுப்பகுதி யில் தனது மண்ணில் வைத்து படுகொலை செய்ததாக கனடா குற்றம் சுமத்தியிருந்தது. அந்த படுகொலையில் ஈடுபட்ட ஒருவரை தாம் கைது செய்துள்ளதாக கனடா கடந்த வாரம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள சீக்கிய மதத் தலைவர் ஒருவரை இந்திய புலனாய்வுத் துறையினர் படுகொலை செய்ய முற்பட்டதாக அமெரிக்கா கடந்த வருடம் குற்றம் சுமத்தியது டன் அதில் தொடர்புடைய ஒருவரை செக் குடியரசில் வைத்து கைது செய்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மே தினத்தில் ... தொடர்ச்சி ...

இந்தப் பேரணியில் கலந்துகொண்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தனது உரையில், தாம் செய்த தவறுகளை சரி செய்தாலும், கட்சி தனது கொள்கைகளை தொடரும் என மீண்டும் வலியுறுத்தினார். வயது முதிர்வு மற்றும் உடல்நலக் கவலைகள் இருந்த போதிலும், மஹிந்த ராஜபக்ஷ ஒரு தலைவராக தனது கவர்ச்சியைத் தக்க வைத்துக் கொள்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்தப் பேரணியில் அதனை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

முன்னாள் ஜனாதிபதி ராஜபக்" தனது உரையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆசீர்வாதத்தைப் பெற்ற வேட்பாளர் இருப்பார் என்று கூறினார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்தே வேட்பாளராக இருப்பார் என அவர் கூறவில்லை என்றும், ஜனாதிபதி விக்கிரமசிங்கவிற்கு கட்சியினால் அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு இடமளிப்பதாகவும் அவரது இந்த உரை குறித்து அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய மக்கள் சக்தியும் கொழும்பில் ஒரு பேரணியை நடாத்தியது. கணிசமான மக்கள் இதில் கலந்துகொண்டிருந்தார்கள். ஆனால் கட்சி எதிர்கொண்ட சில உள்ளகச் சிக்கல்கள் கூட்டத்தில் தெளிவாகத் தெரிந்தன. முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன மற்றும் தலதா அத்துகோரள ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொள்ளாதவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும், முன்னாள் இராணு வத் தளபதியுமான சரத் பொன்சேகா, தனது நடத்தை தொடர்பான பிரச்சினைகள் தொடர் பாக கட்சியுடன் சட்ட நடவடிக்கைகளில் சிக்கியிருந்த நிலையில், மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த போதிலும், கூட்டம் முடி யும் முன்னரே வெளியேறிச் சென்றமையால், இந்த முரண்பாடுகள் தீர்க்கப்படவில்லை என்ற ஊகங்கள் மீண்டும் எழுந்துள்ளன. கட்சிக்குள் இருந்துகொண்டே கட்சித் தலைமையை விமர்சித்தது போன்ற காரணங்களால் சஜித்துடன் அவரது முரண்பாடு தொடர்கின்றது என்பதை, அவர் இடையில் வெளியேறிச் சென்றமை வெளிப் படுத்தியது.

ஆக, பிரதாக கட்சிகள் மே தினத்தில் தமது பலத்தைக் காட்டுவதற்கு முற்பட்டு பலவீனத்தைக் காட்டியிருப்பதையே காணக்கூடியதாக இருந்தது.

• • •

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## உலகின் மனச்சாட்சியையும் உலுக்கிய நாள்

மட்டு.நகரான்

இணைந்த வடகிழக்கில் தமிழர்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காக இந்த மண்ணில் ஆகுதியாக்கிய அனைவரையும் நினைவுகூரும் இந்த நாட்களில் வடகிழக்கில் வாழும் தமிழர்கள் எதிர்காலத்தில் எவ்வாறான முன்னெடுப்புகளை செய்யவேண்டும் என்பதை சிந்திக்கவேண்டிய நாளாகவும் இந்த நாள் இருக்கின்றது.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் என்பது வெறும் நினைவேந்தல் நாள் அல்ல, ஒட்டுமொத்த உலகின் மனச்சாட்சியையும் உலுக்கிய ஒரு நாளாக கருதப்படுகின்றது. இன்று பலஸ்தீன மக்களுக்காக இரக்கப்படும் சர்வதேச சமூகம்,அந்த மக்களுக்காக குரல் எழுப்பும் சர்வதேச மக்கள் சமூகம் ஈழத்தில் தமிழர்களுக்கு எதிராக நடந்த அநீதிகளுக்கு குரல் எழுப்பாத நிலைமையினை வெளிப்படுத்தும் ஒரு நாளாகவும் இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளை நாங்கள் நோக்க முடியும்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வானது வடகிழக்கில் அனுஸ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மும்முரம்பெற்றுவருகின்றன. சிவில் சமூக அமைப்புகளும் அரசியல்கட்சிகளும் இந்த நிகழ்வினை ஏற்பாடுசெய்துவருவதை காண முடிகின்றது. உண்மையில் இந்த நிகழ்வு எழுச்சிபெறவேண்டும்.அந்த எழுச்சி ஏற்படவேண்டுமானால் மக்கள் அதில் அதிகளவில் கலந்துகொண்டு தமது எழுச்சியை வெளிப்படுத்தவேண்டும்.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது வெறுமனே நினைவேந்தலாக அல்லாமல் வடகிழக்கு இணைந்த தாயகத்தில் தமிழர்கள் உரிமையுடன் சுதந்திரமாக வாழும் நிலையை ஏற்படுத்துவதற்கு தேவையான அழுத்தங்களை வழங்குவதற்கான ஒரு நிகழ்வாக அமைய வேண்டும் என்பதே இன்று அனைவரது எதிர்பார்ப்பாகவுள்ளது.

வடகிழக்கு தமிழர்களின் தாயகம். கிழக்கினை கைநழுவவிட்டுவிட்டு நாங்கள் தாயகத்தில் தமிழர்களாக வாழமுடியாது.இணைந்த வடகிழக்கில் தமிழர்கள் தமிழர்களாக வாழவேண்டுமானால் கிழக்கில் அதற்கான கட்டமைப்புகள் மேற்கொள்ளப்படவேண்டும்.இறுதி யுத்தத்தின்போது நடந்த அவலங்களை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வெளிப்படுத்தினாலும் அந்த நிகழ்வானது வடகிழக்கில் நடைபெற்ற ஒட்டுமொத்த இன அழிப்பினையும் நினைவுகூருவதாக மட்டுமல்லாமல் தமிழர்களின் தாயகம் சுயாட்சி என்பனவற்றினை வலியுறுத்தும் நிகழ்வாக அமையவேண்டும்.



ஆனால் இன்றைய செயற்பாடுகளை பார்க்கும்போது அவ்வாறான நிலைமையினை வெளிப்படுத்தும் நிகழ்வாக அமையுமா? என்பது சந்தேகமே.கிழக்கினைப்பொறுத்த வரையில் 2010ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடாத்தி வருகின்றது. 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினராக பா.அரியநேத்திரன் இருந்த காலம் தொடக்கம் இந்த நினைவேந்தல் இன்று வரையில் அனுஸ்டிக்கப்பட்டுவருகின்றது. அக்காலப்பகுதியில் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே இந்த நிகழ்வுகள் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன. ஒரு தடவை கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தில் நிகழ்வு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோது ஆலய வளாகத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு நிகழ்வினை தடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோதிலும் அன்றைய பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த பொன்.செல்வராஜா,சீ.யோகேஸ்வரன் ஆகியோர் அரியநேத்திரனுக்கு பக்கத்துணையாகயிருந்து அந்த நிகழ்வினை நடாத்தியிருந்தனர். இன்றும் கிழக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் உணர்வுபூர்வமாக நடைபெற்றுவருகின்றது.

இன்றைய காலப்பகுதியில் தமிழர்களின் அரசியல் நிலைமைகள் என்பதும் மிகவும் கவலைக்குரியதாகவுள்ள நிலையில் இவ்வாறான நிகழ்வுகளை எழுச்சிமிக்கதாக மாற்ற வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கின்றது.இந்த நினைவேந்தலுடன் தமிழர் தாயகப்பகுதியில் அரசியல் பலப்படுத்தப்பட்டு அனைவரும் ஒன்றுபட்டு செயற்படக்கூடிய சூழ் நிலையுருவாக்கம் பெறவேண்டும்.

கிழக்கினை பிரிக்காத வகையிலான அரசியல்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

வடகிழக்கு தமிழர் தாயகத்திற்காக இந்த மண்ணில் ஆகுதியாக்கிய இலட்சக்கணக்கானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் இந்த நாளில் அவர்களின் இலட்சியக்கனவுகளை புதைகுழியில் புதைக்கும் செயற்பாடுகளை யாரும் செய்யவேண்டாம்.



இன்றைய காலத்தில் முன்னெடுக்கப்படும் தமிழ் பொதுவேட்பாளர் விடயம் என்ற ஒன்று முன்னெடுக்கப்படுமானால் அதனை அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்த முடிவாகவே எடுக்கவேண்டும். இவ்வாறான தீர்மானங்கள் எடுக்கும்போது கிழக்கு மக்களின் கருத்து என்பது மிக முக்கியமாக கருதப்படுகின்றது.

இன்று இந்த தீர்மானம் எடுத்தவர்களினால் தமிழ் தேசிய பரப்பில் உள்ள கட்சிகளை ஒன்றிணைத்துசெல்முடியாத நிலை காணப்படுகின்றது. இது மிக ஆபத்தானதாக மாறும் நிலையேற்படலாம்.



தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி தமிழ் தேசிய அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கான கோரிக்கைகளையும் தேர்தல் விஞ்ஞாபனமாக முன்வைத்து அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தைதமிழ்மக்களைவாக்களிக்கும்படி கோர முடியும். அவ்வாறு ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் ஆணையை பெற முடியும்.அது சர்வதேச கவனத்தையும் பெறும். இந்த ஆணை வலுவுள்ளதாகவும் அமையும். அதனை அடித்தளமாகக் கொண்டு பன்னாட்டு அரசியலில் தமிழ் மக்கள் தமக்கான தேசிய அபிலாசைகளை அடைவதற்கான அரசியல் செயல் திட்டத்தை முன்னெடுக்கவும் முடியும். ஈழத் தமிழர்கள் தமது இறைமையை வெளிப்படுத்துவதற்கும், நிரூபிப்பதற்கும் இந்த ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது மிக அவசியம் என்ற கருத்து பரவலாக முன்வைக்கப்படுகின்றது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# உணவுப் பாதுகாப்பின்மையும் பெருந்தோட்ட மக்களும்

துரைசாமி நடராஜா

இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மை நிலை அதிகரித்து வருவதாக அறிக்கைகள் வலியுறுத்துகின்றன. அதிலும் பெருந்தோட்ட மக்களின் உணவுப் பாதுகாப்பின்மை மேலும் மோசமடைந்துள்ள நிலையில் இது எதிர்காலத்தில் பாதக விளைவுகள் பலவற்றுக்கும் உந்துசக்தியாக அமையுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி, விலைவாசி அதிகரிப்பு, வருமானப் பற்றாக்குறை உள்ளிட்ட பல நிலைமைகள் நாட்டு மக்களின் வறுமை நிலையை அதிகரித்துள்ளன. இதன் தாக்கம் பல்வேறு துறைகளிலும் எதிரொலித்துள்ள நிலையில் உணவுத் தேவையையும் நிறைவேற்ற முடியாத நிலையில் பலர் அல்லலபடுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. யுனிசெப் அமைப்பின் அண்மைய அறிக்கையின்படி 2.3 மில்லியன் குழந்தைகள் உட்பட 5.7 மில்லியன் மக்களுக்கு உணவு உதவி தேவைப்படுவதாக தெரியவருகின்றது.



5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் 15.7 சதவீதமானோர் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகளின் குடும்பங்கள் பட்டினியால் வாடுவதால், குழந்தைகள் கடுமையான வளர்ச்சி குன்றிய நிலை மற்றும் மரணத்தை சந்திக்க நேரிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஊட்டச்சத்துக் குறைபாடு தற்போது தெற்காசியாவில் இரண்டாவது கடுமையானதாகவும், உலகில் பத்தாவது கடுமையானதாகவும் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமையும் நீங்கள் அறிந்ததேயாகும்.

### விவசாயம் பாதிப்பு

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் அமைப்புக்களால் கடந்த வருடம் நாடளாவிய ரீதியில் குடும்பங்கள் மத்தியில் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் 3.9 மில்லியன் மக்கள் ஓரளவு உணவுப் பாதுகாப்பின்மை நிலைக்கும், சுமார் ஒரு இலட்சம் மக்கள் தீவிர உணவுப் பாதுகாப்பின்மைக்கும்முகங்கொடுத்திருப்பதாக ஆய்வு குறிப்பிடுகின்றது. 56 வீதமான குடும்பங்கள் தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு பல்வேறுபட்ட மாற்று வழிகளை கையாளும் நிலையில் கடந்த 2022 மே மாதத்துடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த முன்னேற்றமே அடையப்பட்டிருந்தது.

பொருளாதார நெருக்கடிக்கடியின் விளைவாக அனைத்து விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பாக 0.25 தொடக்கம் 2 ஹெக்டேயர் நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொள்ளும் குறுநில விவசாயிகள் மிகவும்



மோசமாக பாதிப்படைந்திருப்பதாகவும் ஆய்வு மேலும் வலியுறுத்துகின்றது. அத்தோடு இவ்வாண்டில் 1.16 மில்லியன் தொன் கோதுமை, 130,000 தொன் சோளம், 465,000 தொன் அரிசி மற்றும் 200,000 தொன் உருளைக்கிழங்கு என்பன உள்ளடங்கலாக மொத்தமாக 1.8 மில்லியன் தொன் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. கடந்த வருடம் மே மாதம் மேற்கொள்ளப்பட பிறிதொரு மதிப்பீட்டின்படி உணவுப் பாதுகாப்பின்மை நிலை மிகவும் உயர்வாக காணப்படும் பிரதேசங்களில் பெருந்தோட்டப்பகுதி (42 சதவீதம்) முதலிடத்திலும், வடமாகாணம் (28 சதவீதம்) இரண்டாம் இடத்திலும், கிழக்கு மாகாணம் (23 சதவீதம்) மூன்றாமிடத்திலும காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியுடன் வரிச் சுமை மக்களின் மீது சுமத்தப்பட்டதால் கடும் வறுமை நிலைக்கு ஆளாகியுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை 50 இலட்சத்தை தாண்டியுள்ளதாக குடிசார் மற்றும் புள்ளி விபரத்திணைக்கள அண்மைய அறிக்கை வலியுறுத்தியது. 2019 ம் ஆண்டு காலப்பகுதியில் வறுமைக் கோட்டுக்கு கீழ் இருந்த இந்த வறிய மக்கள் முழு சனத்தொகையில் 25 இலட்சமாக பதிவாகியிருந்தபோதும் வறிய மக்கள் பிரிவுக்கு புதிதாக 30 இலட்சம் பேர் இணைந்திருந்தனர். நாட்டின் மொத்த சனத்தொகையில் 2019 ஆகும்போது நூற்றுக்கு 11.9 வீதமானவர்களே வறுமை நிலையில் இருப்பதாக பதிவாகியிருந்தபோதும் அண்மைக்காலமாக அது 25 சதவீதமாகியுள்ளது. இதனடிப்படையில் வறுமை நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டியவர்களின் சதவீதம் அதிகரித்துள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. வற்வரி வீதத்தை அதிகரிப்பதற்கு முன்னர் இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் நூற்றுக்கு 27.9 வீதமானவர்கள் 2024 ம் ஆண்டாகும்போது வறுமை நிலைக்கு ஆளாவர் என்பது உலக வங்கியின் கணிப்பாக இருந்தது.



வறுமை மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பாக பேசுகின்றபோது இந்த விடயங்களில் மலையக மக்களின் நிலைமை இரட்டிப்பாகியுள்ளமை யாவரும் அறிந்த விடயமாகும். கடந்தகால மற்றும் சமகால ஆய்வுகள் பலவும் இதனை வெளிப்படுத்து வதாகவுள்ளன. 1976 ம் ஆண்டு நிகழ்ந்த 'இலங்கை போஷாக்கு அளவீடு 'வெளியிட்ட தகவலின்படி கிராமியச் சிறுவர்களைக் காட்டிலும் தோட்டப் புறச் சிறுவர்களே பெருமளவு நீடித்த போஷாக்கின்மையாலும், குறை போஷாக்கினாலும் பாதிக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது.

தோட்டப் பகுதிகளில் கலோரியளவில் உணவு நுகர்ச்சி சராசரிக்கு மேலாக இருப்பினும், புரத, உயிர்ச்சத்துக்கள் நிறைந்த உணவு நுகர்ச்சி மிகமிகக் குறைவாக இருப்பதனால் அவர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். இதேவேளை 1979 ம் ஆண்டு நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் 1975 ம் ஆண்டிலிருந்து தோட்டப்புற மக்களின் சுகாதார நிலைமைகளில் படிப்படியாக மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

### ஒதுக்கப்பட்ட சமூகம்

ஆரம்ப காலந்தொட்டே பெருந்தோட்டத் தமிழ் மக்கள் போதுமான வருமானமின்மை,தமது தனிமனித இயலுமைகளையும் ஆற்றல்களையும் மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பின்மை, மனித உரிமைகள் மறுக்கப்படுதல், தனிமைப்படுத்தப்படுதலும் ஒதுக்கி வைக்கப்படுதலும் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வந்தனர். பெருந்தோட்டங்களோடு அவர்களைப் பிணைக்கும் வதிவிடம் மற்றும் மானிய முறையானது அவர்களிடையே தாம் ஒதுக்கி வைக்கப்பட்ட சமூகம் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது.



ஏனைய துறைகளைச் சேர்ந்த மக்களோடு ஒப்பீட்டு ரீதியில் நோக்குகையில் இலங்கையின் பெருந்தோட்ட மக்களே ஆகக்கூடிய வறுமை நிலையில் வாழுகின்றனர் என்பதை புள்ளிவிவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. உலக வங்கியின் ஆய்வொன்று நாட்டில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலேயே மக்கள் வறுமையின் உச்சப்பிடியில் சிக்கி இருப்பதாக தெரிவிக்கின்றது. தோட்ட மக்களின் வறுமை நிலையானது வருமானம் சார்ந்த ஒரு வறுமையாக மட்டுமன்றி, தமது மனித அபிவிருத்தியை மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லாததால் ஏற்படும் ஒரு வறுமையாகவும் உள்ளது என்று பேராசிரியர் எம்.சின்னத்தம்பி கூறியுள்ளதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

இதேவேளை இலங்கையில் வறுமையை ஏற்படுத்தும் காரணிகள் குறித்தும் பேராசிரியர் பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டுகின்றார். இதனடிப்படையில் சமூக மற்றும் பொருளாதார

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# தடைகள் தகரும் தமிழீழம் மலரும் - பாகம் 3

## சி.செ.புலிக்குட்டி அவர்களின்



# நூல் வெளியீட்டு விழா..

கற்பூர தீபங்களை அவர்களின் உண்மையான வரலாற்றைத் தாங்கி நின்ற "தடைகள் தகரும் தமிழீழம் மலரும்" என்ற பெயரில் 2 பாகங்கள் வெளிவந்த நிலையில் 3 ஆம் பாகம் கடந்த 5/5/2024 ஞாயிற்றுக் கிழமை வெளியிடப்பட்டது.




திருமதி கலைவிழியின் தலைமையில் பெண் செயற்பாட்டாளர்களால் இந் நிகழ்வு சிறப்புற ஒழுங்கமைக்கப்பட்டது.

பொதுச்சுடர் ஏற்றுதலுடன் இந் நிகழ்வு சிறப்புறத் தொடங்கியது. அதைத்தொடர்ந்து பிரித்தானியக் கொடியை தளபதி யேறி அவர்களின் மகன் ஏற்றி வைக்க தமிழீழத் தேசியக் கொடியை மாவீரத் தளபதி பிரிகேடியர் ஆதவன் அவர்களின் துணைவியார் திருமதி சுதா அவர்கள் ஏற்றி வைத்தார். அகவணக்க நிகழ்வுடன் ஈகைச்சுடரை மாவீரர் லெப்ரினன் கேணல் மாதவியின் சகோதரி மாலா அவர்கள் ஏற்றி வைத்தார். மலர் மாலையை கற்பூர தீப மாவீரன் லெப் கேணல் சிரித்திரன் அவர்களின் சகோதரி அணிந்து வைக்க மலர் வணக்கம் இளையோர்களால் செய்யப்பட்டது.

பறை விடுதலைக்கான குரல் குழுவினர் பறை இசை முழங்க, இதிகா பிரதீபன் , வைகா பிரதீபன் எழுச்சி நடனம் வழங்கினர்.

மருத்துவர் திரு . சூரியகுமரன் அவர்கள் நினைவுகள் தாங்கிய சிறப்புரை ஒன்றை வழங்கிச் சிறப்பித்தார்.



இளைய தலைமுறையின் எடுத்துக்காட்டாய் செல்வி பூமிசா சிவகரன் கவிதை வழங்கினார். திரு.மைக்கல் மற்றும் திரு சுரேஸ் ஆகியோர் எழுச்சிப்பாடல்களை பாடினர். திருமதி கலைவிழி அவர்கள் வெளியீட்டுரையை வழங்கினார். அதைத் தொடர்ந்து "தடைகள் தகரும் தமிழீழம் மலரும்-பாகம் 3" நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. முதல் பிரதியை திருமதி கவிக்குயில் அவர்கள் வெளியிட்டு வைக்க மாவீரத் தளபதி பிரிகேடியர் சொர்ணம் அவர்களின் புதல்வனும் மாவீரர் எழில்மதி அவர்களின் சகோதரனும் ஆன செல்வன் பிரபாநந்தன் பெற்றுக் கொண்டார். பின்னர் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.



இதழ் உரையை திருமதி விழியரசி அவர்கள் சிறப்புற வழங்கினார். மலைகள் அவர்கள் பாடல் பாட சில கலைநிகழ்வுகளைத் தொடர்ந்து நன்றியுரை வழங்கப்பட்டது. இந் நிகழ்வை செல்வி அ.வி. முகிலினி அவர்கள் தொகுத்து வழங்கினார். இப் புத்தகம் அடுத்த தலைமுறையினரது கைகளில் சேருதல் வரலாற்றுக் கடமை என்கின்றனர் புத்தகக் குழுவினர்.

# அடுத்து நிகழப்போவது என்ன? ஒரு புதிய பனிப்போரா அல்லது 3ம் உலகப்போரா?

தமிழில்: ஜெயந்திரன்

### குழப்பமான, நெருக்கடியான காலம்

பூகோளம் முழுவதுமே மிக நெருக்கடியான ஒரு காலகட்டத்தைத் தற்போது சந்தித்துக்கொண்டிருக்கிறது. இவ்வாறான மிகவும் குழப்பமான, நெருக்கடியான ஒரு சூழலில், நாம் செல்ல வேண்டிய திசையைக் கண்டறிவதற்கு, கடந்த காலத்தையே நாம் மீண்டும் திரும்பிப் பார்க்க வேண்டும். இலண்டனைத் தளமாகக் கொண்டு இயங்குகின்ற வெளிநாட்டுக் கொள்கைகளுக்கான சிந்தனைப்பள்ளியான சத்தாம் ஹவுசின் *(Chatham House)*, மேனாள் இயக்குநரான றொபின் நிப்ளெற் *(Robin Niblett)* தனது புதிய புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பது, போன்று, ஒரு புதிய பனிப்போரை நோக்கி நாம் நகர்ந்து கொண்டிருக்கிறோமா? அல்லது வரலாற்று ஆசிரியரான நையல் பேர்கஸன் *(Niall Ferguson)* விவாதிப்பது போன்று, மூன்றாம் உலகப் போரின் விளிம்புக்கே நாம் வந்துவிட்டோமா? அல்லது, நானேசில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டது போன்று, 19ம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவில் நிகழ்ந்தது போன்று, ஏகாதிபத்தியங்களுக்கிடையே நடைபெற்ற போட்டி இப்போது மீண்டும் வல்லரசுகளுக்கான போட்டியாக மாறிவிட்டதா? என்ற கேள்வியை எழுப்பத் தோன்றுகின்றது.

### 'யுகம்'

தற்போதைய நிகழ்வுகளின் போக்குக்கான விளக்கத்தைக் கொடுக்க, நாம் மேற்கொள்ளும் பிரயத்தனத்தை, வரலாற்று ரீதியாகப் புரிந்து கொள்ளப்படக்கூடிய ஒரு வடிவத்துக்குள் இடுவதாயின், 'யுகம்' என்ற பதத்தை நாம் பயன் படுத்த வேண்டும். இவ்வாறு வரலாற்றில் ஒன்றில் நாம் ஏற்கனவே சந்தித்த ஒரு அனுபவத்துக்குச் சமமானதாக இருக்கலாம். அல்லது, ஏற்கனவே நாம் கடந்துவந்துவிட்ட ஒரு யுகத்துக்கும் முற்றிலும் மாறுபட்ட ஒரு யுகமாகவும் இருக்கலாம். சிஎன்என் *(CNN)* ஊடகத்தின் வெளிநாட்டுக் கொள்கையின்



குரு என்று போற்றப்படும் வாறீட் சக்கரையா *(Fareed Zakaria)*, அண்மையில் தான் வெளியிட்ட நூலில் கூறுவது போன்று, இது புரட்சிகளின் யுகமா? என்ற கேள்வியும் முன்வைக்கப்படுகின்றது. இவ்வாறு அவர் விபரிப்பதன் கருத்து என்னவென்றால், பிரெஞ்சுப் புரட்சி, கைத்தொழிற் புரட்சி, அமெரிக்கப் புரட்சிகள் போன்ற வரலாற்றில் ஏற்கனவே நடந்தேறிய புரட்சிகளில் இருந்து, நாம் ஏதாவது பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியுமா? என்பதாகும். அல்லது த பினான்ஷல் ரைம்ஸ் *(The Financial Times)* என்ற சஞ்சிகையின் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கான ஆய்வாளராகப் பணியாற்றுகின்ற, கிடியோன் றாஹ்மான் *(Gideon Rachman)* கூறுவது போன்று, இது பலம் வாய்ந்தவனின் யுகமா? அப்படி எதுவுமே இல்லை என்று ஐரோப்பிய ஆணையத்தின் வெளி



நாட்டு உறவுகளுக்கான இயக்குநராகப் பணி யாற்றும் மார்க் லெயோனாட் *(Mark Leonard)* குறிப்பிடுவது போன்று, இது அமைதியற்ற யுகமா? ஏனென்றால் தொடர்புகள் ஏற்படும் போது அங்கே முரண்பாடுகளும் ஏற்படுகின்றன என்பது அவரது புரிதலாகும்.

### எவ்வாறான யுகம்?

முன்னர் நான் குறிப்பிட்ட எல்லாவற்றையும் விட்டுவிடுங்கள்! வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பான நிபுணர்கள் என்ற வரிசையில் அமரராகிவிட்டட ஹென்றி கிஸிஞ்ஞர் *(Henry Kissinger)* இன்னொருவருடன் இணைந்து எழுதிய நூலின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, இது ''செயற்கை நுண்ணறிவின் யுகம்'' தான். புதிய அரசியல்வாதி *(the New Statesman)* என்ற சஞ்சிகையின் அண்மைய இதழில் பன்னாட்டுக் கட்டுரை எழுத்தாளரான, புறூணோ மசேயெஸ் *(Bruno Macaes)* குறிப்பிட்டுள்ளது போன்று, இது ஆபத்தின் யுகமா? இதுமட்டுமன்றி வெளிநாட்டு விவகாரங்கள் என்ற இதழின் இணையத்தளத்திற்குப் போய், யுகம் என்ற சொல்லை நீங்கள் இட்டுத் தேடும் பொழுது, அறநெறிகள் அற்ற யுகம், நிலையற்ற சக்தி யுகம், குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பி வாழும் யுகம், அமெரிக்காவை முன்னே வையுங்கள்! வல்லரசுகளின் கவனச்சிதறல், காலநிலைப் பேரிடர் இவ்வாறான மேலும் பல எடுத்துக்காட்டுகளை அங்கு நீங்கள் பார்க்கக்கூடியதாக இருக்கும்.




இன்னொரு வகையில் பார்ப்பதாயின், இது ஒரு மிகைப்படுத்தலின் யுகமா என்று கூட சிந்திக்கத் தோன்றுகின்றது. சந்தையில் விற்பனையை அதிகரிப்பதற்காக எண்ணங்கள் எண்ணுக்கணக்கின்றிக் குவிந்துபோயிருக்கும் சந்தைச்சூழலில், தமது ஊடகங்கள் அல்லது சஞ்சிகைகளின் விற்பனையை அதிகரிக்கும் ஒரே நோக்குடன், புத்தக வெளியீட்டாளர்களும், ஊடக ஆசிரியர்களும் பெரிய, கவனத்தை ஈர்க்கின்ற அல்லது மலினமான தலைப்புகளைப் பயன்படுத்த எழுத்தாளர்களைத் தூண்டுகின்றார்களா? என்ற கேள்வி கூட இங்கு பொருத்தமான ஒன்றாகவே இருக்கும்.

### "கடந்த காலத்தை விட நிச்சயமான வேறு எதுவுமே எங்களிடம் இல்லை."

''கடந்த காலத்தை விட நிச்சயமான வேறு எதுவுமே எங்களிடம் இல்லை.'' என்று துல்லியமான ஆங்கில உரைநடையின் குருவான *(master of precise English prose)* எவ்லின் வோக் *(Evelyn Waugh)* தனது *(Brideshead Revisited)* என்ற ஆக்கத்தில் குறிப்பிடுவது போன்று இவ்விடயத்தை நகைச்சுவைக் கண்ணோட்டத்துடன் நோக்குவதற்கு அப்பால், வரலாற்றிலிருந்து நாம் பாடம் கற்க முயல வேண்டும். வரலாற்றை எப்படி வாசிப்பது என்பது தான் இங்கே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய தந்திரம் ஆகும். பழமையும் புதுமையும், ஒரே மாதிரியானவையும் வேறுபாடானவையும் எல் லாம் ஒன்றாகக் கலந்திருக்கின்றன என்ற விடயத்தை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

### அமெரிக்க – சீன உறவு

தற்போது, உலகின் இரண்டு வல்லரசுகளான அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரண்டுக்கும் இடையேயான உறவைக் கருத்தில் எடுக்கும் போது, ''உலக நிகழ்வுகளில் மிக அதிக பின்விளைவுகளை ஏற்படுத்துக்கூடிய ஒரு உறவு இது'' என்று அமெரிக்க இராஜீகச் செயலரான அன்ரனி பிளிங்கன் *(Anthony* அண்மையில், தான் பேஜிங்குக்கு *(Bejing)* மேற்கொண்ட பயணத்தின் போது கூறியது இங்கே கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இவ்விரு வல்லரசுகளும், முன்னர் பனிப்போர் காலத்தில் நிலவியது போன்று, ஒரு பூகோள ரீதியிலான, பன்முகப்படுத்தப்பட்ட, கொள்கை ரீதியான தாக்கத்தைக் கொண்டதும் அதே நேரம் நீண்ட கால மூலோபாயப் போட்டியையும் கொண்டவை என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.



இவை எப்படியிருப்பினும், நிப்ளெற் தனது நூலின் தொடக்கத்தில் குறிப்பிடுவது போன்று, புதிதாக உருவாகப் போகும் பனிப் போர், எந்தவிதத்திலும் கடந்த காலத்தில் நிகழ்ந்த பனிப்போரை ஒத்ததாக இருக்கப் போவதில்லை. இங்கு இரண்டு மிக முக்கிய வேறுபாடுகளை நிப்ளெற் குறிப்பிடுகிறார்; முதலாவது இரண்டு வல்லரசுகளுக்கும் இடையே நிலவுகின்ற ஒருங்கிணைந்த செயற்பாடுகள். இந்த ஒருங்கிணைவு பல நிபுணர்களை சிமெரிக்கா *(Chimerica)* என்ற பதத்தை முன்வைக்கத் தூண்டியிருக்கிறது. இங்கே நடைபெறுகின்ற போட்டி வெறும் இதுவா? அதுவா? என்ற இரண்டு


தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# வரலாற்றை மாற்றாது மறக்காது தடைகளைத் தகர்த்து நகரும் சீனாவின் உத்தி

வேல்ஸில் இருந்து அருஸ்

மீண்டும் ஒரு பனிப்போர் அல்லது அதனையும் தாண்டிய முழுஅளவிலான மூன்றாவது உலகப்போருக்கான நகர்வுகளா உலகில் இடம் பெற்றுவருகின்றன என்ற கேள்விகள் அனைவரின் மனங்களையும் ஆக்கிரமித்து வருகின்றது. 2022 ஆம் ஆண்டு உருவாகிய உக்ரைன் - ரஸ்ய போர் அதாவது நேட்டோவுக்கும் ரஸ்யாவுக்கும் இடையிலான மோதல்கள் மேலும் விரிவாக்கம் பெற்றுவருகையில் கடந்த ஆண்டு ஆரம்பமாகிய இஸ்ரேல்-பாலஸ்தீனப் போரும் மத்திய கிழக்கு பிராந்தியத்தை ஒரு நீண்ட காலப்போருக்குள் தள்ளும் ஆபத்துக்களை ஏற்படுத்திவருகின்றது.

இந்த வாரம் ஐந்தாவது தடவையாக ரஸ்யாவின் அரச தலைவராக பதவியேற்றுள்ள அதிபர் விளமிடீர் பூட்டீன் ரஸ்யாவை அழித்துவிட வேண்டும் என முழு மேற்குலகமும் திட்டமிட்டு செயல்பட்டுவருவதாக தெரிவித்துள்ளார். களைப் படையாமால் உக்ரைனுக்கு நிதியையும், ஆயுதங்களையும் அள்ளி வழங்கும் அவர்கள் ஆயுத பலத்தில் நவீன ஆயுதங்களைக் கொண்ட நாடுகள் எனவும் அதனை முறியடிக்க வேண்டும் என்றால் நாம் ஆயுத தொழில்நுட்ப அறிவில் ஒரு படி முன்னே நிற்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



எமது நாடு எப்போதும் மக்கள் மயப் படுத்தப்பட்ட படைத்துறை கட்டமைப்பாகவே *(People's military industrial complex)* செயற்பட்டு வருவதுண்டு. தற்போது அதன் தேவை அதிகரித்துள்ளது. அதாவது போர் என்பது மக்கள் மயப்படுத்தப்பட்டது என்பது அவரின் சிந்தனை. தற்போதைய போரில் பயன்படுத்தப்படும் ஆளில்லாத தாக்குதல் விமானங்களை முறியடிப் பதற்கு மக்களின் பங்களிப்பு அவசியமானது என்பது அவரின் கருத்து. அதேபோலவே மேற்குலக நாடுகளும் போரை மக்கள் மயப்படுத்தும் திட்டங்களை மெல்ல மெல்ல முன்னெடுத்து வருகின்றன.



பிரித்தானியாவில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஆளில்லாத தாக்குதல் விமானங்களை குழம்பும் அல்லது முறியடிக்கும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அதேசமயம் குறுகிய அளவில் தாக்கங்களை ஏற்படுத்தும் *(Tactical nuclear weapons)* அணுவாயுதங்களை கொண்டுள்ள தமது படையினரின் பயிற்சி ஒத்திகை ஒன்றை அண்மையில் ரஸ்யா மேற்கொண்டிருந்தது.

கடற்படை, வான்படை மற்றும் ஏவுகணைப் படைப்பிரிவுகள் இணைந்து மேற்கொண்ட இந்த பயிற்சி என்பது நாட்டிற்கு வரவுள்ள ஆபத்துக்களை முறியடித்து அதன் இறைமையை காப்பாற்றுவது என்பதாகும் என ரஸ்யாவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது இடம்பெறும் போரில் உக்ரைன் வீழந்தால், அங்கு நேட்டோ படையினர் அனுப்பப்படுவார்கள் அல்லது பிரான்ஸ் படையினர் அனுப்பப்படுவார்கள் என பிரான்ஸின் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் கூறிய கருத்துக்கு பதிலடியாகவே ரஸ்யா இந்த தயாரிப்புக்களை மேற்கொண்டுள்ளது. அதாவது நேட்டோ படையினரை எதிர்கொள்ள ரஸ்யா தயாராகி வருகின்றது.

உக்ரைனில் நேட்டோ படையினர் களமிறங்கப்போவதில்லை எனவும் அது தொடர்பில் உக்ரைன் தம்மை கேட்கவில்லை எனவும் நேட்டோவின் தலைவர் ஜென்ஸ் ஸ்ரொலன்பேர்க் இந்த வாரம் தெரிவித்துள்ள அதேசமயம், நேட்டோ படையினர் ரஸ்யாவுடன் நேரிடையாக மோதாது உக்ரைனில் இருந்து உக்ரைன் படையினருக்கு உதவிவருவதாக போலந்தின் அதிபர் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் உக்ரைனுக்கு 300 கி.மீ துராவீச்சுக்கொண்ட ஏவுகணைகளை அமெரிக்கா வழங்கியுள்ள அதேசமயம், பிரித்தானியாவும் நீண்டதூர வீச்சுக்கொண்ட ஸ்ரேம் சடோ ஏவுகணைகளை வழங்கியுள்ளது. அது மட்டுமல்லாது உக்ரைன் அந்த ஆயுதங்களை தாம் விரும்பியவாறு பயன்படுத்தலாம் என அண்மையில் உக்ரைனுக்கு பயணம் மேற்கொண்ட பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் கமரோன் தெரிவித்துள்ளார்.



அதாவது உக்ரைன் விரும்பினால் ரஸ்யாவின் உட்கட்டுமானங்களை தாக்கலாம் என்பது அவரின் கருத்து. அவரின் இந்த கருத்துக்கு பதிலடி கொடுத்த ரஸ்யா தாம் பிரித்தானியாவின் இலக்குகளை பல்வேறு நாடுகளில் தாக்குவோம் என தெரிவித்திருந்தது. ரஸ்யா இந்த கருத்தை தெரிவித்த சில நாட்களில் பிரித்தானியாவின் பாதுகாப்பு அமைச்சகத்தின் தகவல்கள் அனைத்தும் சைபர் தாக்குதல் மூலம் களவாடப்பட்டுள்ளன.

அதனை சீனா செய்ததாக பிரித்தானியாவின் ஊடகங்கள் தெரிவித்துள்ளபோதும் சீனா அதனை மறுத்துள்ளது. ஆனால் தற்போது உள்ள கேள்வி என்னவெனில் அங்கு திருடப்பட்ட தகவல்களில் பிரித்தானியா பாதுகாப்பு அமைச்சகத்தின் பணப் பரிமாற்றம் முக்கியமானது. அதாவது பிரித்தானியா யாருக்கு எல்லாம் இரகசியமாக நிதியை வழங்குகின்றது. யார் எல்லாம் பிரித்தானியாவின் இரகசிய முகவர்களாக செயற்படுகின்றனர் என்ற தகவல்கள் எதிரிகளுக்கு உதவலாம் என்ற கருத்தும் எழுந்துள்ளது. அதாவது பிரித்தானியாவின் இலக்குகளை ரஸ்யா தாக்குவதற்கு இந்த தகவல்கள் உதவலாம்.



போர் மேகங்கள் மெல்ல மெல்ல சூழந்த வருகையில் வல்லரசுகள் தமக்கான அணிகளை உருவாக்கும் முயற்சியில் தீவிரமாக செயற்பட ஆரம்பித்துள்ளன. அதில் முக்கியமானது இந்த வாரம் இடம்பெற்ற சீன அதிபர் சீ ஜின்பிங்கின் ஐரோப்பாவுக்கான பயணம். 2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் இடம்பெற்ற இந்த பயணத்தில் அவர் பிரான்ஸ், ஹங்கேரி மற்றும் சேர்பியா ஆகிய நாடுகளை தெரிவுசெய்துள்ளது என்பது நன்கு திட்டமிடப்பட்ட நகர்வாகவே தெரிகின்றது.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான பூகோள அரசியல் சமரில் ஐரோப்பா நடுவில் சிக்கியுள்ளதுடன், அதில் ஏற்படப்போகும் மாற்றத்தை தான் இந்த பயணத்தின் தெரிவு காட்டுகின்றது. ஐரோப்பிய நாடுகள் முற்றாக அமெரிக்காவுடன் நிற்பதை தவிர்ப்பதே சீனாவின் அண்மைக்கால வெளிவிவகாரக் கொள்கையாக உள்ளது.

ஜேர்மனின் தலைவர் சில வாரங்களுக்கு முன்னர் சீனாவுக்கு தனது வர்த்தகக் குழுக்களுடன் சென்றபோதும், ஜேர்மனி தொடர்ந்து சீனாவுக்கு எதிரான கொள்கைகளை பரப்புவதால் சீன அதிபர் தனது பயணத்தில் ஜேர்மனியை தவிர்த்துள்ளது ஒரு மாற்றமாக பார்க்கப்படுகின்றது. அமெரிக்காவின் நிதி உதவியுடன் இயங்கும் சிந்தனைக்குழாம் என்ற நிறுவனம் ஜேர்மனிக்கும் சீனாவுக்கும் இடையிலான மோதல்களை தீவிரமாக வளர்த்துவருவதாகவும் கூறப்படுகின்றது.

அதேசமயம் முழு ஐரோப்பாவிலும் ஹங்கேரி சீன சார்புள்ள நாடாக உள்ளது. அது ரஸ்யாவுடனும் நல்லுறவுகளையே கொண்டுள்ளது. அது சிறிய நாடு என்பதால் ஐரோப்பிய கூட்டணியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்றாலும் பல்கனுக்கு மேலாக மத்திய ஐரோப்பாவில் அதன் அமைவிடம் சீனாவின் வர்த்தக நலன்களுக்கு முக்கியமானது. ஐரோப்பாவில் சீனாவுக்கான கதவுகள் மூடப் பட்டால் அதனை இலகுவாக ஹங்கேரி ஊடாக சீனா சரிசெய்துவிடும். எனவே தான் அங்கு மின்சார கார் உற்பத்தி நிறுவனத்துடன் கூடிய பல்கலைக்கழகம் ஒன்றை சீனா கட்டி வருகின்றது.

கிறீஸில் உள்ள பிரோஸ் என்ற சீனாவின் துறைமுகத்தில் ஆரம்பிக்கும் சீனாவின் பொருளாதார பாதையில் ஹங்கேரிக்கும் கிறீஸிற்கும் இடையில் சேர்பியா உள்ளது. சேர்பியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இல்லாதுவிட்டாலும், 1990 களில் நேட்டோவினால் தாக்குதலுக்கு உள்ளான நாடு என்பதுடன், மேற்குலகத்திற்கும் சேர்பியாவுக்கும்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## போர் முடிந்து ... தொடர்ச்சி ...

2022இல் இடம்பெற்ற தடுத்து வைப்புக்களில், அவரை வாசி- 24பேரில் 11 பேர் – சம்பவங்கள் யூலை 2022 இல் ரணில் விக்கிரமசிங் கவின் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னரேயே நிகழ்ந்தன. இந்த 139 சம்பவங்களில், 65 சம்பவங்களில், பாதிக்கப்பட்டவர்கள் அவர்களது சொந்த வீடுகளிலிருந்து அல்லது உறவினர்களின் வீடுகளிலிருந்து, உறவினர்கள் முன்னிலையில் சிறிலங்காவின் சட்ட அமுலாக்கள் அதிகாரிகளால் பிடித்துச் செல்லப்பட்டார்கள்.

இதர சம்பவங்களில் பெரும்பாலானவற்றில், அவர்கள் வீட்டுக்கு அல்லது வேலைக்குச் சென்றுகொண்டிருக்கையில் பிடித்துச் செல்லப்பட்டார்கள். இவ்வனைத்துச் சம்பவங்களிலும், தடுத்து வைக்கப்பட்டவர் களது கண்கள் கட்டப்பட்டும், கைகள் பின்னால் கட்டப்பட்டும், பெரும்பாலும் வெள்ளைநிற வான்களிலேயே பிடித்துச் செல்லப்பட்டிருக்கின்றார்கள். ஒரு சில சம்பவங்களைத் தவிர, மற்றைய அனைத்திலும் அவர்கள் அடையாளம் தெரியாத இடங்களுக்கே கொண்டு செல்லப்பட்டதுடன், குடும்பங்களுக்கும் அவர்கள் எங்கே கொண்டு செல்லப்பட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படவில்லை.

இரகசியத் தடுப்பு மையங்களில் தடுத்து வைத்திருக்கப்பட்டிருக்கையில், 139 தடுப்புக்காவல் சம்பவங்களில் 130 இல், விசாரணைகளின்போது, குறைந்த பட்சம் கடுமையாகத் தாக்கப்பட்டது உட்பட சித்திர

## குருதியை ... தொடர்ச்சி ...

விடப் பட்டிருந்தன.

தற்போது கோவிட் தடுப்பு மருந்துக்கான தேவை குறைந்து வருவதாகவும், தமது மருந்தின் மூலம் 6.5 மில்லியன் மக்களின் உயிர்களை காப்பாற்றியதாகவும் அந்த நிறுவனத்தின் பேச்சாளர் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது தெரிவித்துள்ளார்.

இந்த தடுப்பு மருந்து தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து பல ஐரோப்பிய நாடுகள் அதனை பயன்படுத்துவதை தவிர்த்திருந்தன. தடுப்பு மருந்து குருதியை உறையச் செய்வதுடன், சிலருக்கு குருதி உறைவதையும் தடுத்தியிருந்தது. இதனால் பிரித்தானியாவில் பலர் உயிரிழந்ததுடன், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## திருமலை நாக ... தொடர்ச்சி ...

வழிபாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதோடு அப்பகுதியில் புதையல் தோண்டியுள்ளதாகவும் திரியாய் மக்கள் கூறுகின்றனர்.

விவசாயம் மற்றும் கால் நடை வளர்ப்பை தமது வாழ்வாதார தொழிலாக கொண்டுவரும் திரியாய் மக்கள் நெல் விதைப்பின்போதும், அறுவடையின்போதும் வளத்தாமலையடி நாகதம்பிரா னுக்கு நேர்த்தி வைத்து பொங்கிப் படைத்த பின்னரே தமது தொழி லைத் தொடங்குவதாகவும், புல்மோட்டையைச் சேர்ந்த இஸ்லா மிய சகோதரர்கள்கூட நம்பிக்கை வைத்து நேர்த்தி வைத்து வந்ததாகவும் திரியாய் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது குறித்த ஆலயத்தை வழிபட முடியாமலும் நேர்த்திக்கடன்களை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளமையினாலும் ஆலயத்தில் இருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள புல்மோட்டை பிரதான வீதியில் நின்று ஆலயத்தை பார்த்து கற்பூரம் ஏற்றி வழிபட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றார்கள். எனவே வளத்தாமலையானை வழிபடுவதற்கு அனுமதி வழங்குமாறு திரியாய் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



வதைகளுக்கு ஆளாக்கப்பட்டிருந்தனர். 85 சம்பவங்களில், பிளாஸ்ரிக்பைகளால் மூச்சுத்திணறல் செய்யப்பட்டது. 47 சம்பவங்களில் சிகரட் அல்லது சூடான பொருட்களால் அவர்களுக்கு சூடுவைக்கப்பட்டது. 46 பேர் நீரில் முகத்தை அழுத்தி மூச்சுத் திணறலுக்கு உள்ளாக்கப்பட்டனர். 32 சம்வங்களில் அவர்கள் கயிற்றில் கட்டித் தொங்கவிடப்பட்டனர். 85 சம்பவங்களில் அவர்கள் பலமுறையான வடிவங்களில் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப் பட்டனர்" எனக் கூறப்பட்டிருந்தது.

## இங்கிலாந்து ... தொடர்ச்சி ...

ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே இங்கிலாந் தில் உடனடியாக பொது தேர்தலை பிரதமர் அறிவிக்க வேண்டும் என்று லண்டன் மாநகர மேயராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சாதிக் கான் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

மேயர் பதவிக்கான போட்டி யில் ரிஷி சுனக்கின் யார்க் மற்றும் நார்த் யார்க்ஷயர் ஆகிய இடங்களில் தொழிற்கட்சி வெற்றி பெற்றுள்ளது, இங்கிலாந்து முழுவதும் உள்ள கவுன்சில் தேர்தல்களில் கொன்சவேட்டிவ் கட்சி பெரும் தோல்வியை சந்தித்தனர்.

திரு சுனக், வடக்கு யார்க்ஷயரில் உள்ள ரிச்மண்ட் தொகுதியின் எம்.பி. தொழிற்கட்சியின் செய்தித் தொடர்பாளர், பிரதமரின் சொந்தக் கட்சியினர் கொன்சவேட்டிவ் கட்சியை விட தொழிற்கட்சியைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

"இது யார்க் மற்றும் நார்த் யார்க்ஷயரில் ஒரு உண்மையான வரலாற்று முடிவு. கீர் ஸ்டார்மரின் தொழிலாளர் கட்சி இப்போது ரிஷி சுனக்கின் கொல்லைப்புறத்தில் வெற்றி பெறுகிறது, "என்று தொழிலாளர் செய்தித் தொடர்பாளர் தி இன்டிபென்டன்ட் இடம் கூறினார்.

## மன்னாரில் ஒரு ... தொடர்ச்சி ...

சுவடுகள் அழிக்கப்பட போகின்றது. மக்களின் வாழ்விடங்கள் அழிக்கப் பட்டு மக்கள் வாழ முடியாத நிலைக்கு தள்ளப்படப் போகிறது" என்று குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அருட்தந்தை சந்தியோகு மாக்கஸ் அடிகளார், "எமது வளமான மண் அழிக்கப்பட்டு, எதுவும் அற்ற ஒரு நிலைக்கு தள்ளப்படும். எனவே எமது மக்களை ஒன்று கூட்டி பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க நாங்கள் தள்ளப் பட்டுள்ளோம். இவ்விடயம் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று அவரது முடிவை நாங்கள் எதிர்பார்க்க உள்ளோம்.

மன்னார் தீவில் உள்ள மக்க ளின் நலனை கருத்தில் கொண்டு ஜனாதிபதி நல்லதொரு தீர்வை வழங்குவாராக இருந்தால் எதிர்ப்பு போராட்டங்கள் கைவிடப்படும். எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது விட்டால் எமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். மன்னார் தீவில் இருந்து ஒரு துண்டு நிலத்தை கூட நாங்கள் இத் திட்டங்களுக்கு வழங்க மாட்டோம்" என்றும் அருட்தந்தை சந்தியோகு மாக்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

## மூதூரில் சர்வ ... தொடர்ச்சி ...

மூதூர் தளவைத்தியசாலையினுடைய வைத்தியர் என். நிப்ராஸ் மற்றும் தாதி உத்தி யோகத்தர்களும் கலந்து கொண்டு வைத்திய முகாமை நடத்தி இருந்தார்கள். இதன்போது நீரிழிவு, இரத்த அழுத்தம், தொற்றா நோய்கள், கொலஸ்ட்ரோலுக்கான இரத்த பரி சோதனைகளும், மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர், மூதூர் பிரதேச சபையினுடைய செயலாளர், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமை முகாமையாளர், கிராம நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அரச அலுவலகங்களில் கடமையாற்றும் பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## அரசியல்த்துறை ... தொடர்ச்சி ...

முதலாவது தாக்குதல் தளபதியான மேஜர் சோதியா (வசந்தி) அவர்களின் தாயார் திருமதி மேரி மிக்கேல் பிள்ளை தாயகம் கரவெட்டியில் கடந்த திங்கட்கிழமை (6) கால மானார்.

காலமாகிய இருவருக்கும் இலக்கு தனது அஞ்சலிகளைத் செலுத்துகின்றது.



## உணவுப் பாது ... தொடர்ச்சி ...

உட்கட்டமைப்புக்களில் காணப்படும் குறைபாடுகள், அவற்றின் போதாத தன்மை, போதிய வேலைவாய்ப்புகள் இல்லாமை, சமூகத்தின் பல்வேறு குழுவினர்கள் பொதுச் சேவைகளின் நன்மையை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளமை, தரங்குன்றிய கல்வி, சுகாதாரம் மற்றும் அடிப்படை சேவைகள் என்பன காணப்படுதல் போன்ற பல விடயங்கள் வறுமை அதிகரிப்பில் செல்வாக்கு செலுத்துவதாக பேராசிரியர் சின்னத்தம்பி தெரிவிக்கின்றார்.

மேலும் பெருந்தோட்டத் தொழிலாளர், பொதுவசதிகள் குறைவாகவுள்ள எல்லைப்புறக் கிராமங்களில் வாழும் மக்கள், போரினால் பாதிக்கப்பட்டு தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி உறவினர் வீடுகளிலும், அகதிமுகாம்களிலும் தஞ்சம் புகுந்துள்ளோர் போன்றோர் பொதுச்சேவைகளின் நன்மையினைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ள நிலையில் இதனால் இவர்களிடையே அதிகரித்த வறுமை நிலை காணப்படுகின்றது. அத்தோடு நாட்டில் ஏனைய துறைகளிலும் பார்க்க தோட்டப்புறங்களிலேயே வசதிகள் குறைவாகவும், தரங்குன்றியனவாகவும் உள்ளன.



எனவே தோட்டப்புற மக்களே இதனால் ஆகக்கூடிய அளவில் பாதிக்கப்படுகின்றனர். அவர்களிடையே உயர்ந்த வறுமை நிலை காணப்படுவதற்கு இவை கணிசமாக பங்களிக்கின்றன என்பதே உண்மையாகும். நாட்டின் வறுமை நிலையைக் குறைப்பதில் அரசாங்கத்தின் பொதுநலச் சேவைகளும், சமூகநலன் திட்டங்களும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. பல்வேறு காரணங்களால் தோட்டப்புற மக்கள் இவற்றின் நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியாததனாலேயே அவர்களிடையே வறுமை நிலை மேலோங்கி காணப்படுகின்றது என்றும் கருத்து வெளிப்பாடுகள் இருந்து வருகின்றன.

பெருந்தோட்ட மக்களின் வறுமையை ஒழிப்பதற்கு அரசாங்கத்தினால் கடந்த மற்றும் சமகாலத்தில் அமுல்படுத்தப்பட்டு வரும் நலன்புரி கொடுப்பனவுகள் உரியவாறு கை கொடுக்கவில்லை என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. சமகாலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் 'அஸ்வெசும' நலன்புரி கொடுப்பனவுத் திட்டம் குறித்தும் பல்வேறு விமர்சனங்கள் இருந்துவரும் நிலையில் பெருந்தோட்ட மக்களுக்கு உரியவாறு இத்திட்டத்தின் நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு மலையக அரசியல்வாதிகள் பல்வேறு காய்நகர்த்தல்களையும் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

### உலக உணவுத் திட்டம்

வறுமையின் உக்கிரத்துக்கு மத்தியில் பெருந்தோட்டப் பகுதிகளில் 51 சதவீதமான குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பின்மைக்கு முகங்கொடுத்திருப்பதுடன், நாட்டின் ஏனைய இனங்களுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்டப் பகுதிகளிலேயே அதிகளவானோர் இந்நிலையினால் பாதிக்கப்பட்டிருப்பதாக உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் குறிப்பிட்ட சில குடும்பங்களை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் குறித்த காலப்பகுதியில் 24 சதவீதமான குடும்பங்கள் ஓரளவு உணவுப் பாதுகாப்பின்மை நிலைக்கு முங்கொடுத்திருந்தன. பின்தங்கிய மற்றும் நலிவுற்ற சமூகங்களைச் சேர்ந்த குடும்பங்கள் நாளாந்தம் உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைத்துக் கொண்டமையே இதற்கு பிரதான காரணமாக அமைந்தது.

இதனிடையே 2023 நவம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி நாடளாவிய ரீதியில் உணவுப் பாதுகாப்பின்மை நிலைவரம் தீவிரமடைந்து வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இதன் விளைவாக பெருந்தோட்டப்பகுதி மக்கள் வெகுவாக பாதிப்படைந்திருப்பதாக உலக உணவுத் திட்டத்தின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து உணவுப்பொருள் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக நாட்டின் போஷணை மட்டம் வெகுவாக பாதிப்படைந்துள்ளது. 2023 இல் 5 வயதுக்குக் குறைந்த சிறுவர்களில் 120,230 பேர் மிதமான மந்தபோஷணை நிலைக்கு முகங்கொடுத்**துள்ளனர்.**

**மேலும் இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் சமூகப் பாதுகாப்பு செயற்திட்டங்கள் நாட்**டின் மொத்த சனத்தொகையில் 27 சதவீதமானோரை சென்றடைந்திருப்பதுடன், இந்தப் பெறுமதி ஏனைய அயல்நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிக உயர்வானதாகும். இருப்பினும் இச்செயற்திட்டங்களை ஒருங்கிணைத்தல், முறையான கண்காணிப்பினை மேற்கொள்ளல் போன்றவற்றில் அரசாங்கம் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. உலக உணவுத் திட்டத்தின் இவ்வருடத்துக்கான அறிக்கையின்படி பொருளாதார நெருக்கடியினால் மிகமோசமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுமார் 11.7 மில்லியன் டொலர் பெறுமதியான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மக்கள் ஏற்கனவே வறுமையின் கோரப் பிடிக்குள் அல்லல்படும் நிலையில் சமகால நிலைமைகள் அதனை இரட்டிப்பாக்கி வருகின்றன. இது ' மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு ஏறி மிதித்த' நிலைக்கு ஒப்பானதாகும். இதேவேளை பெருந்தோட்ட மக்கள் உணவுப் பாதுகாப்பின் மைக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையானது மாணவர்களின் கல்வி, சுகாதாரம், சமூக நிலை போன்ற பலவற்றிலும் தாக்கம் செலுத்தக் கூடியதாகும். இவற்றோடு பல்வேறு நோய் நொடிகள் ஏற்படுவதற்கும் இது அடிப்படையாக அமையும் என்பதனையும் மறுப்பதற்கில்லை. இதனை கருத்திற்கொண்டு அம் மக்களின் உணவுப் பாதுகாப்பின்மை நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து அம்மக்களின் சகல துறைசார் எழுச்சிக்கும் வித்திடுவது மிகவும் அவசியமாகும்.

• • •

## முள்ளிவாய்க்கால் ... தொடர்ச்சி ...

அவ்வாறானால் இந்த செயற்பாட்டினை வடகிழக்கில் யார் முன்னெடுக்கப்போகின்றார்கள். இன்று வடகிழக்கில் உள்ள தமிழ் தேசிய கட்சிகளில் தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்துவரும் நிலையில் அவர்களினால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் எந்தளவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும் என்ற கேள்வியெழுகின்றது.

அதுமட்டுமன்றி ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் உள்ளவர்கள் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதாக கூறுகிறார்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கூறுகிறார்கள், இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி இன்னும் முடிவு எடுக்கவில்லை என்று கூறினாலும் சிங்கள வேட்பாளர் ஒருவரை ஆதரக்கும் நிலையும் பொதுவேட்பாளரை ஆதரிக்கும் நிலையும் என இரண்டு பிரிவுகள் அங்கு காணப்படுகின்றன.

தமிழ்த்தேசிய கூட்டணி பொதுவேட்பாளர் பொருத்தம் என்கிறார்கள்.தமிழர் விடுதலைக்கூட்டணி இதைப்பற்றி வாயே திறக்கிறார்கள் இல்லை. இவ்வாறான நிலையில் வடகிழக்கில் உள்ள தமிழ் தேசிய கட்சிகள் உள்ள நிலையில் பொதுவேட்பாளர் என்ற விடயம் எந்தளவுக்கு மக்கள் மத்தியில் கொண்டுசெல்லப்படும் என்பது கேள்விக்குறியே.அவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் கொண்டுசென்றாலும் ஒற்றுமையில்லாத தமிழ் தேசிய கட்சிகளின் பின்னால் செல்லமுடியாது என்ற மன நிலையினை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுவிடும்.

ஏன் என்றால் கடந்த காலத்தில் தேர்தல் காலங்களில் தேர்தல் விஞ்ஞாபனங்களை முன் வைக்கும் அரசியல் கட்சிகள்தேர்தலின் பின்னர் அது தொடர்பில் கவனத்தில் கொள்ளாத நிலையே இருந்துவருவதனால் தமிழ் மக்கள் தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் மீது நம்பிக்கையிழக்கும் நிலைமையினை ஏற்படுத்தியது. இதுவே கிழக்கிலும் கடந்த தேர்தல்களில் பாரிய தாக்கத்தினை செலுத்தியது.

எதிர்காலத்தில் பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டு கிழக்கில் அது தோற்கடிக்கப் படுமானால் வடகிழக்கு தமிழர்களின் தாயக கோரிக்கை என்பது பலவீனப்படும் நிலைமை ஏற்படும்.வடக்கினைப்பொறுத்த வரையில் இந்த கோரிக்கைகள் என்பது தமிழர்களினால் விடுக் கப்படும் கோரிக்கைகள் என்பது தமிழ் மக்களை பெரியதளவில் பாதிக்காது.

ஆனால் கிழக்கில் பிள்ளையான் வியாழேந்திரன் போன்றவர்கள் இந்த கோரிக்கைக்கு எதிராக செயற்படும் நிலைமை அத்துடன் முஸ்லிம் கள் அதற்கு எதிராக செயற்படும் நிலைமை என்பது பாரிய தாக்கத்தினை செலுத்தும்.வெறுமனே வடக்கினை கருத்தில்கொண்டு எடுக்கும் தீர்மானங்கள் கிழக்கில் தமிழர்களின் இருப்பினை பாதிப்பதாக அமையக்கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

தமிழ் பொதுவேட்பாளர் தீர்மானம் என்பது தமிழர்கள் தமது கோரிக்கையினை மீண்டும் சர்வதேசத்திற்கு கொண்டுசெல்லும் ஒரு தீர்ப்பாக அமையும்.

எனினும் இதனை தமிழ் மக்கள் மத்தியில் கொண்டுசெல்வதனால் வடகிழக்கு இணைந்த பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும். அதன் ஊடாக அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைக்கப்பட்டு இந்த தீர்மானத்தினை ஏற்றுக்கொண்டு முன்கொண்டுசெல்வதற்கான அழுத்தங்களை வழங்கவேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ்தேசிய கட்சிகள் கொள்கைரீதியிலான முடிவுகளை எடுக்காமல் விட்டால் அதன் தாக்கம் ஏனைய பேரினவாத கட்சிகளில் தேர்தல் கேட்கும் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் சாதகமாகமாறும்.

இது ஆபத்தான நிலைமையினை வடகிழக்கில் ஏற்படுத்தும் என்பதுடன் தமிழர்கள் தமக்கான சந்தர்ப்பத்தினை சாதகமாக பயன்படுத்தும் நிலைமை இல்லாமல்போயி இன்னும் ஐந்து வருடங்கள் காத்திருக்கவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படும் நிலையேற்படும்.

முள்ளிவாய்க்கால் நினைவுகூரப்படும் இந்த நாளில் அவர்களின் கனவுகளை நனவாக்கு வதற்கு சிறந்த தீர்மானங்களை எடுத்து மக்கள் முன்கொண்டுசெல்லவேண்டிய பொறுப்பு இன்று எங்கள் அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

• • •

## அடுத்து நிகழ ... தொடர்ச்சி ...

தெரிவுகளுக்கிடையேயான போட்டி அல்ல. ஏனென்றால் ரஷ்யா, இந்தியா, ஜப்பான், துருக்கி, சவுதி அரேபியா, பிறேசில் போன்ற பெரிய மற்றும் நடுத்தர வர்க்க சக்திகளும் இருக்கத் தான் செய்கின்றன. முதல் குறிப்பிடப்பட்ட விடயம் (ஒருங்கிணைந்த செயற்பாடுகள்) முக்கியமானவை என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் ஒரு பனிப்போர், ஒரு முழு அளவிலான ஒரு போராக வெடிப்பதை அதனால் தடுத்துவிட முடியாது.

### மிகப் பெரும் மாயை

மிகப் பெரும் மாயை *(The Great Illusion)* என்ற தலைப்பில் நோமன் அஞ்செல் *(Norman Angell)* என்ற ஊடகவியலாளர், ஆழமானதாக்கத்தைஏற்படுத்திய ஒரு நூலை வெளியிட்டிருந்தார். ஐரோப்பாவில் உள்ள பெரிய சக்திவாய்ந்த நாடுகளுக்கிடையே இருக்கின்ற பொருண்மிய ரீதியாக ஒன்றோடொன்று தங்கியிருக்கும் இயல்பைப் பார்க்கும் போது, அந்த அரசுகளுக்கிடையே ஒரு போர் மூள்வது மிகவும் சாத்தியமற்ற விடயம் என்றும் அப்படிப் போர் தொடங்கினாலும் அது நீண்ட நாட்கள் நீடிக்காது என்று தனது நூலில் அவர் குறிப்பிட்டிருந்தார். நாளடைவில் அஞ்செல் முன்வைத்த கொள்கையே உண்மையில் மாயை என்பது வெள்ளிடைமலையாகியது.

ஆனால் நிப்ளெற் முன்வைக்கும் இரண்டாவது வேறுபாடு உறுதியானது. சிலவேளைகளில் நாம் இங்கே குறிப்பிடுகின்ற மற்றைய சக்திகள் - ‘அணிசேராதவை’ என அழைக்கப்படுகின்றன – பனிப்போர் காலத்தில் உருவான இன்னொரு பதம் இதுவாகும் - ஆனால் 1989க்கு முன்னர் இருந்த அணிசேரா நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது, அதிகம் செல்வந்த நாடுகளாகவும் அதிக சக்திவாய்ந்த நாடுகளாகவும் தற்போது இவை இருக்கின்றன. உக்ரேனில் தற்போது நடைபெற்று வரும் போரை உற்றுநோக்கும் போது, சீனா, இந்தியா போன்ற நாடுகளுடன் ரஷ்யா கொண்டிருக்கும் உறவின் காரணமாக, மேற்குலகம் அதற்கு எதிராக எந்த நடவடிக்கை எடுத்தாலும், அதன்பொருண்மியம்அனைத்துக்கும் தாக்குப்பிடிக்கக்கூடியதாகவே இருக்கிறது.

### பல்பரிமாண உறவுகள்

அதிக குழப்பம் நிறைந்த இந்த யுகத்துக்கு ஒரு பொதுவான பெயரை நாம் சூட்டுகின்ற இன்னொரு முயற்சியாக, அரசியல் விஞ்ஞானி இவான் கிறெஸ்ரேவ் *(Ivan Krastev,* மார்க் லெயோனாட் *(Mark Leonard)* ஆகியோருடன் நானும் *(Timothy Garton Ash)* இணைந்து, ஆ லா காட் வேள்ட் *(A la carte world)* என்ற பதத்தை முன்வைத்தோம். இங்கே, மேற்குலகத்தைச் சேராத பெரிய மற்றும் நடுத்தரச் சக்திகள், பரிவர்த்தனைக் கூட்டணிகளை உருவாக்குகின்றன. சில நேரங்களில், சமகாலத்தில், வெவ்வேறான பங்காளிகளுடன், வெவ்வேறான சக்திப்பரிமாணங்களில் அவை உறவுகளை ஏற்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாகக் கூறுவதாயின், சீனாவுடன் ஒரு முதன்மைப் பொருண்மிய உறவை ஏற்படுத்தும் அதே நேரம், பாதுகாப்பு சார்ந்த இன்னொரு உறவை அமெரிக்காவுடன் அவை ஏற்படுத்துகின்றன. சீனா, ரஷ்யா, ஈரான், வட கொரியா போன்ற நாடுகளுக்கு இடையே ‘சர்வாதிகார அச்சு’ *(axis of authoritarianism)* என்ற பார்வைக்கு இது முற்றிலும் எதிரானதாகும். இங்கே அச்சு என்ற பதம் ஒரு போர்க்காலக் கூட்டணி என்று பொருள்படுகிறது. அமெரிக்க அதிபரான ஜோர்ஜ் புஷ் *(George Bush)* அடையாளப்படுத்திய தீமையின் அச்சு *(axis of evil)* என்பது மட்டுமன்றி, நாஜி ஜேர்மனி *(Nazi Germany)*, பாசிஸ்டு இத்தாலி *(Fascist Italy)*, ஏகாதிபத்திய ஜப்பான் *(Imperial Japan)* போன்ற நாடுகளின் ஆரம்ப அச்சையும் *(original axis)* குறித்து நிற்கின்றது. 1930 இல் இருந்தது போன்று இப்போது, டெய்லி மெயில் *(Daily Mail)* என்ற நாளிதளில் பேர்கஸன் எழுதியதைப் போன்று, ஆபத்துநிறைந்த ஒரு சர்வாதிகார அச்சும் *(A menacing authoritarian Axis)* இங்கே தோற்றம் பெற்றிருக்கிறது.

### ‘மானிடமையம்’

இரண்டு வகையான வரலாற்றுச் சக்திகளின் முக்கிய உதாரணங்களை, எங்கள் காலம் முன்வைக்கின்றது. மனித செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்படாத விளைவுகளின் திரட்சி, பூகோள வெப்பமயமாக்கல், பல்லுயிர்த்தன்மை படிப்படியாகக் குறைந்துபோதல் போன்ற செயற்பாடுகளின் காரணமாக மிகவும் ஆபத்தான வகையில், எமது இயற்கைச் சூழமைவை மாற்றியமைத்துக்கொண்டிருக்கிறது. வளங்கள் அருகிச்செல்தல், இவ்வாறான மாற்றங்களின் ஒரு முக்கிய விளைவாகும். ஆகவே ‘மானிடமையம்’ *(Anthropocene)* என்ற பதத்தையே எங்கள் யுகத்தின் முக்கிய பண்பாக நாம் கொள்ள முடியும் செயற்கை நுண்ணறிவு உட்பட அதிவேகமாக விருத்தியடைந்துகொண்டிருக்கும் தொழில்நுட்பம், கட்டமைப்பு ரீதியிலான பிறிதொரு மாற்றம் ஆகும். எந்தவிதத்திலும் எதிர்வுகூறமுடியாத வகையில் இராணுவ ரீதியாகச் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் செயற்பாடு, இறுதியில், அமெரிக்கா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு இடையே ஏற்கனவே நிலவும் ஆகக்குறைந்த மூலோபாய ரீதியிலான அணுவாயுதத் தடுப்பைக் கூடப் பாதிப்புக்கு உள்ளாக்கலாம் என்று கீஸிஞ்சர் விவாதித்தார். “எதிர்வுகூற முடியாத நிகழ்வுகள், அல்லது தனிமனிதத் தெரிவுகள் முக்கியமானவை அல்ல என்று நீங்கள் கருதுவதாக இருந்தால்”, 2022 பெப்ரவரியில், வொலோடிமீர் ஸெலென்ஸ்கி *(Volodymyr Zelenskiy)* காட்டிய தலைமைத்துவம், மற்றும் ஹொஸ்ற்றோமெல் விமானநிலையத்தை *(Hostomel airport)* ரஷ்யா கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எடுத்த முயற்சியை உக்ரேனியன் படைகள்தடுத்தது போன்ற நிகழ்வுகள், வரலாற்றை எவ்வாறு முற்று முழுதாகப் புரட்டிப்போட்டன என்பதை நீங்கள் நிச்சயமாகத் திரும்பிப்பார்க்க வேண்டும்.

### வரலாற்றை எழுதுவது நாங்களே

இப்போது, கடைசியானதும் முக்கியமானதுமான விடயத்துக்கு நாங்கள் வருவோம். இங்கே நான் அடையாளப்படுத்தியிருக்கும் குழப்பம் நிறைந்த ஓசைகள், ஐரோப்பா என்ற வகையிலும் பூகோள ரீதியாகவும், ஒரு புத்தம் புதிய வரலாற்றுக் காலகட்டத்துக்குள் நாங்கள் வந்து நிற்கிறோம் என்பதன் ஒரு வெளிப்பாடு என்பது மட்டுமன்றி, அடுத்து எந்தத் திசையை நோக்கிச் செல்வது என்பதை அனைவரும் பரபரப்பாகத் தேடிக்கொண்டிருப்பதையும் காணமுடிகின்றது. போருக்குப் பின்னரான *(the postwar period)* இந்தக் காலத்தைத் தொடர்ந்து, (1945க்குப் பின்னர்) சுவருக்குப் பின்னரான காலம் *(the post-Wall period)* வந்தது. ஆனால் அந்தக் காலம் (1989 நவம்பர் 9ம் திகதியிலிருந்து பேர்ளின் சுவர் வீழ்த்தப்பட்ட நாள்), 2022 பெப்ரவரி 22ம் திகதி (உக்ரேன் மீது ரஷ்யா ஒரு முழு ஆக்கிரமிப்பை மேற்கொண்ட நாள்) வரை நீடித்தது. காதலில் மட்டுமன்றி வரலாற்றிலும் தொடக்கங்கள் முக்கியமானவை. 1945ம் ஆண்டுக்குப் பின்னர் வந்த 5 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட விடயங்களே அடுத்த 40 வருடங்களுக்கு பன்னாட்டு ஒழுங்கைத் தீர்மானித்தன. அதாவது ஒரு வகையில், இன்றுவரை நீடிக்கும் ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பை நாங்கள் நினைவிற்கொள்ளலாம். ஆகவே உக்ரேனை வெல்ல வைப்பதற்கு அல்லது தோற்கச் செய்வதற்கு, நாங்கள் எதையெதையெல்லாம் செய்கின்றோமோ, அந்தச் செயற்பாடுகளே புதிய யுகத்தின் தன்மை எப்படியிருக்கும் என்பதைத் தீர்மானிக்கப் போகின்றன. வரலாறு எங்களுக்கு ஒரு முக்கிய பாடத்தைக் கற்றுத் தருகிறது. வரலாற்றை எழுதுவது நாங்களே என்பது தான் அந்தப் பாடம்.

**நன்றி: *www.theguardian.com***

## சீன - அமெரிக்க ... தொடர்ச்சி ...

அமெரிக்கா தலைமையிலான மேற்குலக கூட்டணிக்கும், சீனா தலைமையிலான கூட்டணிக் கும் இடை யிலான விரிசல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரு கின்றது. இந்த மோதல்களால் கோவிட்-19 மற்றும் உக்ரைன் போர் என்பவற்றால் பாதிப்படைந்துள்ள உலகின் பொருளாதாரம் மேலும் மோசமாக பாதிப்படைந்துவருகின்றது. பனிப்போர் காலத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தலை உலகின் பொருளாதாரம் சந்தித்துள்ளது.

பொருளாதார பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் அச்சமடைந்துள்ள உலக நாடுகள் தற்போது முதலீடுகளைச் செய்வதில் அச்சமடைந்து வருகின்றன. இந்த நிலையில் பல நாடுகள் சீனாவை அல்லது அமெரிக்காவை தெரிவுசெய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பு என்ற காரணத்தை முன்வைத்து அமெரிக்கா சீனாவின் வர்த்தகத்திற்கு தடைகளை போட்டு வருகின்றது. அதனை மறுத்துள்ள சீனா, தாய்வானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்குவதை முன்வைத்து அமெரிக்கா மீது தடைகளை மேற்கொண்டு வருகின்றது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுளில் உலக நாடுகளில் 3000 இற்கு மேற்பட்ட வர்த்தக தடைகள் கொண்டுவரப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 3 மடங்காகும். 2017 ஆம் ஆண்டில் இருந்து 2023 ஆம் ஆண்டுவரையிலும் சீனாவில் இருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருட்களின் அளவு 9 விகிதத்தாலும், அமெரிக்காவில் இருந்து சீனா இறக்குமதி செய்யும் பொருட்கள் 4 விகிதத்தாலும் குறைந்துள்ளன.

தற்போதைய நிலை பனிப்போர் காலத்தை விட மோசமாக உள்ளது. ஏனெனில் தற்போது வர்த்தகமயமாக்கல் முன்னரைவிட அதிகம். தற்போதைய நிலை மோசமானால் உலகின் பொருளாதாரம் 7 விகித வீழ்ச்சியைக் காணும், அதனை இந்த உலகம் தவிர்த்தால் அது 0.2விகித வீழ்ச்சியை காணும். உலகின் இந்த நெருக்கடி குறைந்த வருமானம் உள்ள நாடுகளை அதிகம் பாதிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

• • •

## வரலாற்றை ... தொடர்ச்சி ...

இடையிலான உறவுகளும் நல்லதாக இல்லை.

அங்குள்ள சீன தூதரகம் மீது நேட்டோ விமானங்கள் வீசிய குண்டினால் பலர் கொல்லப் பட்டிருந்தனர். அவர்களுக்கும் சீன அதிபர் தனது அஞ்சலிகளை செலுத்தியிருந்தார். அதாவது உக்ரைன்-ரஸ்ய போர் ஆரம்பமாகியதில் இருந்து மேற்குலகத்தின் விரிவாகத்கத்தை தடுக்கும் முயற்சிகளை சீனா மேற்கொண்டு வருகின்றது.

அதாவது அவர்கள் வரலாற்றை மாற்றவு மில்லை, மறக்கவுமில்லை ஆனால் அதன் அனுபவங்களைக்கொண்டு தமது வழிகளில் வரும் தடைகளை உடைத்து பயணிக்கும் சாது ரியத்தை கொண்டவர்களாக இருப்பதே இங்கு முக்கியமானது.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.